# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2197/27 - 2020 ඔක්තෝබර් මස 17 වැනි සෙනසුරාදා - 2020.10.17

*2197/27 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**வலுசக்தி அமைச்சு**

இலங்கையின் இயற்கை வாயுவிற்கான தேசிய கொள்கை

உதய கம்மன்பில சக்தி வலு அமைச்சராகிய நான், அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட இலங்கையின் இயற்கை வாயுவுக்காக தேசியக் கொள்கையை பொது மக்களின் தகவலுக்காக இங்கு பிரசுரிக்கின்றேன்.

உதய கம்மன்பில,
சக்தி வலு அமைச்சர்.

*2020, ஒற்றோபர் 17.*

**இயற்கை வாயுவுக்கான தேசிய கொள்கை**

வலுசக்தி அமைச்சு 2020

*1.* ***அறிமுகம்***

மன்னார் பிரதேசத்தின் இயற்கை வாயு படிமங்கள் தொடர்பான ஆய்வு ரீதியான சான்றுகள் மற்றும் மின்சார உற்பத்தியின் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்காக ஒப்பீட்டளவில் மாற்று தூய எரிசக்தி மார்க்கங்களை பின்தொடர்வது போன்றன இலங்கையில் இயற்கை வாயுவுக்கான விருப்பத்தை மேலும் அதிகரித்துள்ளது.

தூய வளமான இயற்கை வாயு (NG); நிலக்கரி மற்றும் பெற்றோலியப் பொருட்களுக்கு மாற்றீடாக உபயோகிக்கப்படுத்தமுடிவதோடு இதனைப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் பொருளாதார தொழிற்றுறையின் பல்வேறு நோக்கங்களுக்காகவும் உபயோகிக்கமுடியும். மாற்று எரிசக்தி மூலகமொன்றை வழங்குவதோடு அல்லாமல், சர்வதேச அளவில் தொழிற்றுறை நடவடிக்கைகளில் இயற்கை வாயுவை இரசாயன உற்பத்திகளில் ஒரு

மூலப்பொருளாகவும் பயன்படுத்தமுடியும். இது தொழிற்றுறை மற்றும் நுகர்வோர் உற்பத்திகளின் பரந்த அளவிலான உற்பத்தியில் அடிப்படை பொருள்களை உருவாக்குகின்ற யூரியா உரம், மெத்தனோல், எத்தனோல் மற்றும் போர்மால்டிஹைடு போன்ற இரசாயன பொருட்களின் உற்பத்தியிலும் பரந்தளவில் மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

எனவே, சுதேச வளமான இயற்கை வாயு இலங்கையின் சக்தி வளப் பாதுகாப்பிற்கு சிறந்த பங்களிப்பு வழங்குவதோடு இறக்குமதி செய்யப்படும் திரவ இயற்கை வாயுவிற்கு மேலதிகமாக ஏற்படும் மீள வாயுவாக்கல், திரவமாக்கல் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் அற்றதாகும். ஆகவே, கடலுக்கு அப்பால் உறுதிசெய்யப்பட்ட இவ் வளத்திற்கு ஒரு சிறந்த கொள்கை அணுகுமுறையுடன் சிறந்த கேள்வி மற்றும் பொறிமுறைகளை உருவாக்குவதோடு முறையான கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

### *1.1 பின்னணி*

தற்போதுவரை செயற்பாட்டிலிருக்கும் பெற்றோலிய தொழிற்துறையில் இலங்கை நீண்டகால அனுபவத்தைக் கொண்டுள்ளதோடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையானது Rich African முறையையே பிரதானமாகக் கடைப்பிடித்து வருகின்றது. பூகோள ரீதியாக மன்னார் கடற்படுக்கை படிம வரலாறானது சர்வதேசரீதியாக மொசாம்பிக்கில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய வாயுப் படிமங்களின் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. இவற்றுக்கு நிகரான வாயுப் படிமமொன்று இலங்கையின் வடமேற்கு கடற்பகுதியில் 2011ஆண்டுகளின் பிற்பகுதியில் டொறாடோ (Dorado மற்றும் பராக்குடோ (Barracuda) பகுதியில் வாயுவாகவும் திரவமாகவும் இருப்பதாக கெய்ரன் (Cairn) இந்திய நிறுவனத்தால் உறுதிசெய்யப்பட்டது. கடற்படுக்கையை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட 2D மற்றும் 3D புவியீர்ப்பு ஆய்வுகளின் படி, ஆரம்ப வாயு மதிப்பீடுகள் 2 ட்ரில்லியன் கன அடி(TCF) ஆகும். இந்த கண்டுபிடிப்புகள் மன்னாரின் கடலோரப் பகுதிகள், இலங்கையின் ஏனைய கரையோரப் பகுதிகள் மற்றும் படிமங்கள் காணப்படும் வடக்கு மற்றும் கிழக்கு கடற்படுக்கைகளிலும் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தூண்டுதலாக அமைந்தது. இலங்கை அரசானது, படிமங்கள் காணப்படும் பிரதேசங்களாக உறுதிப்படுத்தப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு கடற்படுக்கைகளில் ஏற்கனவே அகழ்வுப் பணிகளை ஆரம்பித்துள்ளது. மேலும், கடற் சட்டத்திற்கமைய, வங்காள விரி குடாவின் படிமங்கள் காணப்படும் பிரதேசங்களாக உறுதிப்படுத்தப்பட்ட கடற்படுக்கைகளில் பாரிய பகுதியை தன்வசப்படுத்தியுள்ளது. (வலைப்பின்னல் தொடர்புகள்: (weblink:https://www.un.org/Depts/los/clcs_new/submissions_files/lka43_09/lka2009executivessummary.pdf)

இலங்கை அரசானது உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து பொசில் எரிபொருள் இறக்குமதியில் தங்கியிருத்தலை குறைப்பதன் மூலம் எதிர்காலத்தில் இயற்கை வாயு (NG) ஏற்றுமதியில் ஒரு சிறந்த நாடாக விளங்க முடியும். இவற்றை மேலும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வோமாகில் பொசில் எரிபொருள் இறக்குமதியை மேலும் குறைத்து அதிக அன்னியச் செலாவணியை சேமிப்பதோடு நீண்டகாலத்தில் இயற்கை வாயுவின் (NG) மூலம் மிகச் சிறந்த பலனை பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எவ்வாறாயினும், சுதேச வளமான இயற்கை வாயுவை(NG) அபிவிருத்தி செய்து முழுமையான செயற்பாட்டு நிலைக்கு வருமாயின் இது நாட்டின் சக்தி வளத் தேவையில் கணிசமான அளவை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் இவ் வளம் பூரண பயன்பாட்டிற்கு வருவதற்கு சில வருடங்கள் ஆகலாம். இதனால், குறுகியகாலத்திற்கு நாடு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியம் மற்றும் மீள வாயுவாக்கப்பட்ட திரவ இயற்கை வாயுவில் (LNG) தங்கியிருக்கும் சூழ்நிலை ஏற்படும்.

பெற்றோலியம் எண்ணெய் மற்றும் நிலக்கரி ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், இயற்கை வாயுவானது ஒப்பீட்டளவில் தூய்மையான சக்தி மூலமாக விளங்குகிறது. இயற்கை வாயு எரியூட்டலின்போது அலகொன்றிற்கு பெற்றோலியம் எண்ணெய் எரியூட்டுவதன் மூலம் வெளியாகும் 25% காபனீரொட்சைட்டைவிட குறைவான காபனீரொட்சைட்டே வெளியேற்றப்படுகிறது. இதேவேளை, நிலக்கரி எரியூட்டலுடன் ஒப்பிடுகையில் 40% த்திற்கும் குறைவான காபனீரொட்சைட்டே வெளியேற்றப்படுகிறது. எனவே சக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதை தவிர சுற்றாடல் பிரச்சினைகளை குறைப்பதற்கும் இயற்கை வாயு உதவுகிறது. காலநிலை மாற்றம் தொடர்பான பரிஸ் அறிக்கையில் கடந்த 2016ஆம் ஆண்டு ஆதரவு தெரிவித்த இலங்கை, கார்பன் உமிழ்வைக் குறிப்பிட்ட காலத்திற்குள் குறைப்பதற்கு தன்னிச்சையாக முன்வந்து உறுதியளித்திருந்தது. இயற்கை எரிவாயுவிற்கு மாறுவது கார்பன் உமிழ்வை குறைப்பதற்கான சிறந்த வழியாகும். பரிஸ் உடன்டிக்கையில் கைச்சாத்திட்டதன் மூலம் வழங்கிய உறுதியை நிறைவேற்றுவதற்கும் இது சாதமாக அமையும். சல்பைட் ஒக்சைட்டின் பூஜ்ய உற்பத்தி (Sox), நைட்ரஜன் ஒக்சைட் (NOx) மற்றும் கார்பன் மொனொக்சைட்டின் (CO) குறைந்தளவிலான உற்பத்தி ஆகியவற்றின் மூலமான வளி மாசினால் ஏற்படக்கூடிய சுகாதார பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்வதற்கு இயற்கை வாயுவிற்கு மாறுவது உதவியாக அமையும்.

சாதகமான வாய்ப்புகள் இருப்பினும், இலங்கையில் இதுவரை எந்தவொரு பொருளாதார துறையிலும் இயற்கை வாயு பயன்படுத்தப்பட்டதில்லை. திரவ பெற்றோலிய எரிவாயுவே உள்நாட்டு மற்றும் தொழிற்துறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. திரவ பெற்றோலிய எரிவாயு உள்நாட்டு தொழிற்துறையில் சமையலுக்காகவே பெரும்பாலும் உபயோகிக்கப்படுவதோடு போக்குவரத்துத் துறையில் இதன் பயன்பாடு குறைவாகவே காணப்படுகின்றது. திரவ பெற்றோலிய எரிவாயுவில் சிறிய பகுதி

இறக்குமதி செய்யப்படுகின்ற போதிலும் பொரும்பாலானவை சப்புகஸ்கந்தை மற்றும் களனியவில் இருந்து பக்க உற்பத்தியாகவே கொள்வனவு செய்யப்படுகின்றது. இலங்கையின் மேல் நிலை தொழிற்துறை பிரதானமாக திரவ எரிபொருளையே(அதாவது பெற்றோல்,டீசல்) போக்குவரத்திற்கும் உலை எண்ணெய் கைத்தொழிற்துறைக்கும் மண்ணெண்ணெய் வீட்டுப் பாவனை மற்றும் மீன்பிடிக்கும் உபயோகிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய்யை (கிட்டத்தட்ட 30%) உள்நாட்டில் சுத்திகரித்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் நேரடி இறக்குமதிகளை அடிப்படையாகக் கொண்டவை. உள்ளூர் சுத்திகரிப்பு நிலையத்தின் கேள்வி அதிகரித்து காணப்பட்டதால் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் 1990 நடுப்பகுதி வரை பிரதான பங்கை வகித்துள்ளது.

கீழ் நிலை பெற்றோலியம் மற்றும் திரவ பெற்றோலிய எரிவாயு தொழிற்துறைகளை நிறுவுவதற்கான பெற்றோலியம் தொடர்பான சட்டங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்புக்கள் போன்றன ஏற்கனவே இலங்கையில் காணப்படுகின்றது. தற்போது, இலங்கையில் பெற்றோலியத் தொழிற்துறையை நிர்வகிப்பதறகான சட்டங்கள் நான்கு உள்ளன. அவையாவன:

- 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டம் (1963 மற்றும் 1965ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது)

- இலங்கையில் பெற்றோலியத்தை அகழ்வு செய்தல் மற்றும் மீளாய்வு செய்வதற்கான 2003ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டம்

- பெற்றோலியம் உற்பத்திகளை இறக்குமதி செய்தல் , ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல், விநியோகித்தல் மற்றும் விநியோகம் செய்ய மாற்று வழிமுறைகளை வழங்குவதற்கான 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலியம் உற்பத்திகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

- பயன்பாட்டு கைத்தொழில் தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) சட்டம்.

இந்த சட்டங்களுக்கான அமுலாக்கப் பொறுப்புக்கள் பல அரச நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய நிறுவனங்கள் பெற்றோலியத் தொழிற்துறையுடன் தொடர்புடைய விடயங்களில் நேரடியாக ஈடுபடுகின்றன:

- பெற்றோலிய விடயத்திற்காக பொறுப்பான நியமிக்கப்பட்டுள்ள பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு (இங்கு அமைச்சிற்கு பின் சொல்லப்பட்ட விடயம்).

- பெற்றோலியப் பொருட்களை சுத்திகரித்தல் உள்ளடங்கலாக இதனை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல், விநியோகம் செய்தல் அல்லது வழங்குவதற்கு அரசிற்கு சொந்தமான நிறுவனமான **(SOE)** இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு (CPC) நிறுவப்பட்டுள்ளது.

- கீழ் நிலை பெற்றோலிய தொழிற்துறை மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கத்தின் கீழ் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு **(PUCSL)** நிறுவப்பட்டுள்ளது.

- 2003 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டமானது இலங்கையின் அனைத்து மேல் நிலை பெற்றோலியச் செயற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி குழுவிற்கு உதவிபுரிவதற்கான அதிகாரங்களை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்திற்கு வழங்கியுள்ளது.

- பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் அரச நிறுவனம் என்ற வகையில் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி குழுவிற்கு, அனைத்து அகழ்வுச் செயற்பாடுகளையும் நிருவகித்தல், சர்வதேச ரீதியாக எண்ணெய் மற்றும் வாயு தொழிற்துறைக்காக அங்கீகரிக்கப்பட்ட தரம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி மற்றும் மீளாய்வுகளை உள்ளூரில் விருத்தி செய்தல். இந்நிறுவனம் இலங்கையின் முன்மொழியப்பட்ட மேல் நிலை தொழிற்துறையின் சீர்திருத்தங்களுக்களை ஒழுங்குபடுத்தும் நபராவார்.

இதற்கு மேலதிகமாக, மேலும் சில நிறுவனங்கள் அங்கீகாரங்களை வழங்குதல், நிதியளித்தல், சான்றளித்தல் மற்றும் செயற்பாடுகளை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் பெற்றோலிய துறையில் மறைமுகமாக தொடர்புபட்டுள்ளன. அவை மத்திய அரசின் நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள், நிதி நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்கள், ஊடக மற்றும் சிவில் சமூக நிறுவனங்கள் ஆகியவை ஆகும். அவற்றுள் முக்கிய நிறுவனங்களானவை: மத்திய வங்கி, மத்திய சுற்றாடல் அதிகார சபை, கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை, இலங்கை துறைமுக அதிகார சபை, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம், போக்குவரத்து திணைக்களம், கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனம்.

### *1.2* தேவை

எரிசக்தி தொழிற்துறை, போக்குவரத்து,வீட்டு மற்றும் வர்த்தக துறைகள் மற்றும் தொழிற்துறைக்கான மூலப்பொருளாக இயற்கை வாயுவை பயன்படுத்துவதன் மூலம் குறிப்பிடத்தக்க பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் அனுகூலங்களை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும் என்பதற்கு கணிசமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால், உள்நாட்டு இயற்கை வாயு மூலங்களுக்கான அபிவிருத்தி அல்லது இறக்குமதி செய்யப்பட்ட திரவ இயற்கை வாயு பயன்பாடு ஆகியவற்றில் காணப்படும் சிக்கல்களை தீர்ப்பதற்கான உரிய தேசிய கொள்கை திட்டமொன்று இல்லாமை இதன் முழுமையான பயன்பாட்டை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது. என்றாலும், திரவ பெற்றோலிய எரிவாயு உள்ளிட்ட பெற்றோலிய பயன்பாட்டை கையாளவதற்கு இலங்கை சட்டம், ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் நிறுவன வழிமுறைகளை உருவாக்கியுள்ளது. ஆனால், அது பரந்தளவிலான பொருளாதார துறைகளில் இயற்கை எரிவாயு பயன்பாட்டின்போது தோன்றும் குறிப்பிட்ட சிக்கல்களை கையாளவதற்கு திருப்திகரமாக அமையும் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

வணிக ரீதியாக சாத்தியமான இயற்கை வாயு தொழிற்துறையை இலங்கையில் அறிமுகப்படுத்துவதன் மூலம் மேல் நிலை பெற்றோலிய வளங்களை பிரித்தெடுத்தல் செயற்பாட்டிலிருந்து, விநியோக நடவடிக்கைவரை பரந்தளவிலான பொருளாதார பரிமாற்றங்களை உள்ளடக்கிய மதிப்புமிக்க அபிவிருத்தியை ஏற்படுத்தும். இந்த முழு செயற்பாடும் நன்கு வெளிப்படுத்தப்பட்ட தேசிய கொள்கை மூலம் நெருக்கமாக வழிகாட்டப்படவும், கண்காணிக்கப்படவும் வேண்டும். சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வாயு வளங்களை அபிவிருத்தி செய்யவும், மின் உற்பத்திக்கான திரவ இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்வதற்குமான இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை அடுத்து கொள்கை, சட்டம், ஒழுங்குறுத்தல்கள் மற்றும் நிர்வாக கட்டமைப்பு ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து பல பங்குதாரர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. தேவை அறிந்து இலங்கையில் இயற்கை வாயு மீதான ஒரு தேசியக் கொள்கையை அபிவிருத்தி செய்வதற்கு சரியான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இதற்கிணங்க, இலங்கை அரசு, அமைச்சின் ஊடாக பொருத்தமான பங்குதாரர்களுடனான ஆலோசனையுடன் இலங்கைக்கான இயற்கை வாயுவிற்கான தேசியக் கொள்கையை உருவாக்கியுள்ளது.( இது NPNG என்று பின்னர் குறிப்பிடப்படும்).

NPNG இன் நோக்கம் யாதெனில், இலங்கையின் அனைத்து தொழிற்துறைகளிலும் இயற்கை வாயுவின் பாவனைகளை அதிகரித்து காபன் வெளியீடுகளைக் குறைப்பதோடு உள்ளூர் கைத்தொழிற்துறைகளின் மூலப்பொருளாக இதனை உபயோகித்தல் ஆகும். இவ் ஒழுங்குமுறைகள் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்காக இதன் தேவைப்பாடுகள் பங்குதாரர்களுடனான சந்திப்புக்கள் மூலம் காலத்திற்கு காலம் மாற்றப்படுவதோடு செயராற்றுகைத் திட்டத்தையும் உள்ளடக்கியிருக்கும். (வாயு பயன்பாடுகள் திட்டம்- *4.1.5.9* பகுதியைப் பார்க்கவும்).

### *1.3* நோக்கம் மற்றும் சூழ்நிலை

இலங்கையில் தொழிற்துறை உள்ளீடாகவும், சக்தி மூலமாக இயற்கை வாயுவை அறிமுகப்படுத்துவதன் மூலம் எழக்கூடும் என எதிர்பார்க்கப்படும் பொருளாதார, தொழில்நுட்ப, பாதுகாப்பு மற்றும் சமூக பிரச்சினைகளை என்.பி.என்.ஜி. கருத்திற் கொள்ளவுள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட மற்றும் முன்னோக்கிய பார்வையாகும். இது நிலையான வளர்ச்சிக்கான பரந்த தேசிய நிகழ்ச்சி நிரலில் இயற்கை வாயுவை ஆதிக்கம் செலுத்தச் செய்யும். பொருளாதார கொள்கைகளின் பரந்த செயற்பாடுகள், எரிசக்தி கொள்கை மற்றும் அதீத வளர்ச்சிக்கான இலக்குகள் மற்றும் தேசிய தீர்மானகரமான பங்களிப்புகள் காலநிலை மாற்றங்கள் குறித்த பரிஸ் உடன்படிக்கைக்கான தேசிய கடப்பாடுகள் ஆகியன என்.பி.என்.ஜி.-இன் நோக்கம், இலக்கு மற்றும் குறிக்கோள்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்தல் மற்றும் சூழல் பாதுகாப்பின் மூலம் அத்தகைய கொள்கைகள், உத்திகள் மற்றும் பொறுப்புகளை பூர்த்தி செய்ய என்.பி.என்.ஜி. எதிர்பார்க்கிறது.

### 1.4 காரணம்

இலங்கையில் பொருளாதார ரீதியாக ஒரு சாத்தியமான சுற்றுச்சூழல் ரீதியிலான நிலையான மற்றும் சமூக பொறுப்புணர்வுள்ள இயற்கை வாயுவை நிறுவுவதற்கு உதவுவதே என்.பி.என்.ஜி.-இன் கோட்பாடாகும். இதனை அடைவதற்கு கொள்கையானது அரசாங்கம், தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் பொதுமக்களின் பாத்திரங்களை கொண்டுள்ளது.

2003ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்திற்கிணங்க, சுதேச வளமான இயற்கை வாயுவிற்கான உள்நாட்டு வளங்களின் பொறுப்பாளியாக விளங்குவதுடன், நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கு அதிகபட்ச நன்மைக்கான நிலையான அபிவிருத்தி மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதற்கான ஒட்டுமொத்த பொறுப்பைக் கொண்டுள்ளது.

இலங்கையின் தொடர்ச்சியான அரசாங்கங்களின் பொருளாதார வளர்ச்சியின் இயந்திரமாக தனியார் துறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தனியார் துறை மூலம் இயக்கப்படும் பொருளாதார ரீதியில் சாத்தியமான இயற்கை எரிவாயுவிற்கான வெற்றிகரமான முயற்சிகளுக்கு சர்வதேச மற்றும் பிராந்திய உதாரங்கள் காணப்படுகின்றன. இருப்பினும், கணிசமான முதலீடுகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சிகளில் தங்கியுள்ள நிலையில், இயற்கை எரிவாயு துறையில் போட்டியிடும் சந்தை சக்தியை பெறுவதற்காக உந்துதல் கொண்ட பெரிய நிறுவன கட்டமைப்புகளை வளர்ப்பதற்கான ஒரு போக்கு உள்ளது. ஆரோக்கியமான போட்டித்தன்மைமே நுகர்வோர் நலன் மற்றும் சந்தை பொருளாதாரத்தின் நிலையான வளர்ச்சி ஆகியவற்றுக்கு மூல ஆதாரமாகும். இதனால், ஒரு ஒழுங்குறுத்துனராகவும், பல தனியார் துறைகள் மத்தியில் ஆரோக்கியமான போட்டித்தன்மையை உறுதிபடுத்துவதற்கும் அரசாங்கம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

இது தவிர உள்ளூர் மூலங்களை நிர்வகித்தல் மற்றும் உள்நாட்டு சந்தை அமைப்புமுறையின் ஒழுங்குபடுத்தலின் பாத்திரங்களை நிறைவேற்றுதலில் அரசாங்கம் கீழ்வரும் துறைகளில் பல பாத்திரங்களை வகிக்க வேண்டியுள்ளது. அவையாவன: உட்கட்டமைப்பின் மேம்பாட்டை மேற்பார்வை செய்தல், முதலீடுகளை எளிதாக்குதல், நல்ல தொழில்துறை நடைமுறைகளை ஊக்குவித்தல், சூழலை பாதுகாத்தல், மக்களின் சுகாதார அபாயங்களைக் குறைத்தல், தவறான கையாள்தல்களின் மூலமான விபத்துகளைத் தவிர்த்தல், சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை கடைப்பிடித்தல், குறியீடுகள் மற்றும் தரங்களை ஏற்றுக்கொள்வது, பிறரது செயற்பாட்டை கண்காணித்தல் மற்றும் இறுதி பயனாளிகளாக நுகர்வோரின் உரிமைகளை பாதுகாத்தல். அரசாங்கம் மற்றும் தனியார் துறை உள்ளிட்ட பிற பங்குதாரர்களையும் உள்ளடக்கி பயனுள்ள விதத்தில் நிறைவேற்றுவதற்கு ஒரு வெளிப்படையான, பொறுப்புணர்வு மற்றும் உள்ளடக்கிய செயல்முறையை ஸ்தாபிப்பதை என்.பி.என்.ஜி நோக்கமாகக் கொண்டுள்ளது. சிவில் சமூகம், ஊடகம் மற்றும் பொதுமக்கள் ஆகியன இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, இங்கு தவறான பயன்பாடு, மோசடிகள், ஊழல்கள் மற்றும் போட்டிக்கு எதிரான நடத்தைகள் ஆகியன முறையாக நிறுவப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும்.

## 2. நோக்கு, இலக்கு மற்றும் குறிக்கோள்

என்.பி.என்.ஜி-இன் நோக்கு, இலக்கு மற்றும் குறிக்கோள் ஆகியன இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. பரந்த நோக்க அறிக்கை மற்றும் முக்கிய கொள்கை இலக்குகள் மற்றும் குறிக்கோள்களின் தொகுப்பு என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.1 நோக்கு

இலங்கையின் பரந்த பொருளாதார துறைகளில் புதிய சக்தி மூலமாகவும், தொழிற்துறை மூலமாகவும் இயற்கை எரிவாயுவை அறிமுகப்படுத்துவதன் மூலம் நேர்மறையான மற்றும் நீண்டகால பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை அடைவதே என்.பி.என்.ஜி.-இன் நோக்காகும்.

### 2.2 இலக்கு

என்.பி.என்.ஜி. பின்வரும் இலக்குகளை அடைவதற்கு விரும்புகிறது:

- 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து தொழிற்துறைகளிலும் இயற்கை வாயுவின் பயன்பாட்டை அதிகரிப்பதுடன் மொத்த சக்தி பயன்பாட்டில் இதனை ஆகக் குறைந்தது 30% ஆகப் பேணுதல்.

- இயற்கை வாயு மற்றும் அதனோடு தொடர்புபட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நிய செலாவணி வருவாயை ஈட்டுதல்.

- தேசிய தீர்மானகரமான பங்களிப்புகள் காலநிலை மாற்றங்கள் குறித்த பரிஸ் உடன்படிக்கைக்கான இலங்கையின் தேசிய கடப்பாடுகளை அடைதல் மற்றும் பச்சை வீட்டு விளைவு வாயு வெளியேற்றங்களைக் குறைத்தல்.

- மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பரிந்துரைக்கப்பட்ட வளி மாசில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எரிவாயுவின் பங்களிப்பின் அளவை குறைத்தல், இதன்மூலம் சுற்றுச்சூழல் காற்று தர நிலைகளை அடைந்து கொள்ளல்.

- இயற்கை வாயு மற்றும் அதனோடு தொடர்புபட்ட தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தனியார் துறையை முதலீடு செய்வதற்கு ஊக்குவித்தல், தொழிநுட்ப பரிமாற்றம் மற்றும் அனைத்துவிதமான பங்களிப்புக்களை வழங்குதல்.

- 2021 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் இயற்கை எரிவாயு நுகர்வோர் ஆகியவற்றுக்கான பயனுள்ள நடத்தை ரீதியான பதில்களைக் கொண்டுவருவதற்கான சட்ட, ஒழுங்குமுறை மற்றும் நிறுவன ஒப்பந்தங்களின் வலுவான கட்டமைப்பை நிறுவல்.

- இயற்கை வாயு மீதான உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீடுகளின் மூலம் திறன்மிக்க ஊழியர்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளின் முற்போக்கான வளர்ச்சி.

### 2.3 குறிக்கோள்

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் இலங்கைக்கு உகந்த மற்றும் சமமான நன்மைகளை உறுதிப்படுத்துவதற்கு, இயற்கை எரிவாயுவின் நிலையான வளர்ச்சிக்கான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரைகளை வழங்குவது என்.பி.என்.ஜி.-இன் குறிக்கோளாகும். கீழ்வரும் குறிப்பிடத்தக்க குறிக்கோள்களை அடைவதன் மூலம் இதனை அடைய முடியும்.

- முக்கிய பொருளாதார துறைகளுக்கு உள்நாட்டு உற்பத்திகள் மற்றும் திரவ இயற்கை எரிவாயு இறக்குமதியின் மூலம் இயற்கை எரிவாயுவின் தடையற்ற விநியோகத்தை உறுதிபடுத்தல்.

- மின்சார துறை முதல் போக்குவரத்து, தொழிற்துறை, வர்த்தக மற்றும் குடியிருப்பு வரை அனைத்து துறைகளிலும் இயற்கை வாயு பயன்பாட்டை ஊக்குவித்தல்

- இயற்கை வாயுவை தொழிநுட்ப மற்றும் பொருளாதார தொழிற்துறைகளுக்கு மூலப்பொருளாக உபயோகப்படுத்துவதற்கு ஊக்குவித்தல் அதாவது உரம், இரசாயன மற்றும் பெற்றோ இரசாயன உற்பத்திகளுக்கு மூலப்பொருளாக உபயோகித்தல்.

- முதலீடுகளை மேம்படுத்துதல் மற்றும் எளிதாக்குதல்

- உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்வதற்காக வருங்கால முதலீட்டாளர்களால் சலுகை திட்டம் மூலமாக உள்நாட்டு வளங்களை கொண்டு இயற்கை எரிவாயு மூலமான வர்த்தக உற்பத்திகளை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களின் மூலம் முதலீடுகளை மேம்படுத்தல்.

- உள்நாட்டு சந்தையில் இயற்கை எரிவாயு விநியோகத்தை மேம்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.

- மிகுந்த போட்டி விலையில் திரவ இயற்கை எரிவாயுவை பெறுவதற்கு நாட்டிற்கு உதவும் வகையில், திரவ இயற்கை எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான வெளிப்படையான நடைமுறையை ஏற்றுக்கொள்ளல்.

- விநியோகஸ்தர்களை தொடர்ந்து முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக போதுமான கவர்ச்சிகரமான வருவாயைத் தரும் வகையில், பாவனையாளர்கள் குறைந்த விலையில் இயற்கை எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கான விலை சூத்திரமொன்றை அமைத்தல்.

- நாட்டில் இயற்கை உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இயற்கை எரிவாயு உற்பத்தியை ஆய்வு செய்தல், சுத்திகரிப்பு, இறக்குமதி செய்தல், சேமிப்பு, மறுசீரமைப்பு, பரிமாற்றம், விநியோகித்தல் மற்றும் நுகர்வு ஆகியவற்றிற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தேவையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளல்.

- ஆய்வு,சுரண்டல்.சுத்திகரிப்பு, செயலாக்க, இறக்குமதி, மறுசீரமைப்பு, சேமிப்பு, ஏற்றுமதி, களஞ்சியம், பரிமாற்றம், விநியோகம் மற்றும் இயற்கை எரிவாயு நுகர்வு ஆகியவற்றைப் பொறுத்து அனைத்து செயல்பாடுகளையும் சுத்தமாக செயல்படுத்துவதை உறுதிப்படுத்தும் ஒரு வலுவான கொள்கை, சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

- இயற்கை எரிவாயுக்களின் ஆய்வு சுத்திகரிப்பு, இறக்குமதி, சேமிப்பு, விநியோகம், உள்நாட்டு உற்பத்தியின் நுகர்வு, இறக்குமதி செய்யப்பட்ட இயற்கை எரிவாயுவின் வடிவங்கள் இதனால் அவர்கள் பொதுமக்களுக்கும் ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச சிரமத்துடனும் குறைந்தபட்ச உடல்நல ஆபத்துடனும் நடத்தப்படுகின்றனர் என்பதை உறுதிபடுத்தும் வகையில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்புத் தரங்கள், நடத்தை நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை கொண்டிருத்தல்.

- இலங்கை துறைமுகங்களில் பொது-தனியார் பங்காளித்துவ முயற்சிகளாகவும், ஏற்றுமதி சந்தைகளுக்கு இயற்கை எரிவாயுவை வழங்குவதற்கான விருப்பங்களை ஆராயவும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை மேம்படுத்தல்.

- உள்நாட்டு நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப திறன்களை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடக்கி, உள்ளூர் வர்த்தகங்களின் பங்களிப்புடன் கூடிய உள்ளூர் வர்த்தகங்களின் திறனை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

### 3. பிரதான கொள்கைக் கோட்பாடுகள்

என்.பி.என்.ஜி.ஆனது ஆறு முக்கிய கோட்பாடுகளின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. என்.பி.என்.ஜி.- இன் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்கு கொள்கை நடவடிக்கைகளின் தெரிவு இந்த கோட்பாடுகளின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது.

#### 3.1 சக்தி பாதுகாப்பை உறுதிபடுத்தல்

சக்தி பாதுகாப்பு மலிவான விலையில் மின்சாரம் தடையின்றி கிடைப்பதை உறுதிபடுத்துகிறது. கிடைக்கும் திறன், அணுகுமுறை, கட்டுப்படியான விலை, ஏற்புத் தன்மை ஆகியனவே எரிசக்தி பாதுகாப்பின் பரந்த பரிணாமங்களாகும். பொசில் எரிபொருட்களின் இறக்குமதியில் தங்கியிருப்பதை குறைத்து, பொருளாதார துறையில் முக்கிய பதிலீடாக இயற்கை வாயுவை அறிமுகப்படுத்துவன் மூலம் இந்த நான்கு பரிணாமங்களையும் மேம்படுத்துவதே என்.பி.என்.ஜி.-இன் நோக்கமாகும்.

#### 3.2 தூய எரிசக்தியின் மூலம் சுற்றாடலை பாதுகாத்தல்

உமிழ்வு அதிகமான பெற்றோலிய எரிவாயு மற்றும் நிலக்கரிக்கு மாற்றீடான தூய எரிசக்தியாக இயற்கை எரிவாயு காணப்படுகிறது. பெற்றோலிய எரிவாயு மற்றும் நிலக்கரிக்கு மாற்றீடாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ இயற்கை எரிவாயு பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் சுற்றாடலை பாதுகாக்க முடிவதுடன், உமிழ்வு வெளியேற்றத்தையும் குறைக்க முடியும். இதன் மூலம் காலநிலை மாற்ற பாதிப்புகளை குறைக்க முடிவதுடன், வளி மாசினால் ஏற்படக்கூடிய மனித சுகாதாரத்திற்கான பாதிப்பையும் குறைக்க முடியும்.

#### 3.3 பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஆபத்தை குறைத்தல் :

இயற்கை எரிவாயுவானது சுற்றுச்சூழலுக்கும், தேசிய பொருளாதாரத்திற்கும் நன்மை பயக்கும் அதேவேளை, எளிதில் தீப்பற்றக் கூடியது என்பதால் கவனமாக கையாள வேண்டியது அவசியமாகும். சிறந்த பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கையாளாவிடின், திரவ இயற்கை எரிவாயு போன்ற இயற்கை எரிவாயுவை கையாளும்போது மனித உயிரிழப்பு மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுதல் போன்ற ஆபத்தான நிகழ்வுகளை சந்திக்க நேரிடும். எனவே பொதுமக்கள் பாதுகாப்பையும், ஆபத்துகளை குறைப்பதற்கும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகள், விதிமுறைகளை ஏற்றுக்கொள்தல் என்.பி.என்.ஜி. வழிகாட்டும் முக்கிய கொள்கையாகும்.

#### 3.4 உள்நாட்டு வளங்களின் உச்சப் பயன்பாடு

பெற்ரோலியம் தேசிய பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கு முக்கிய உள்நாட்டு மற்றும் உலக சந்தையில் வாய்ப்புகளை திறக்க சாத்தியம் உள்ளது. இதுவரை சக்தி, போக்குவரத்து, தொழிற்துறை உள்ளிட்ட துறைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை பெற்றோலிய இறக்குமதியில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. நாடு தனது அந்நிய செலாவணியில் கணிசமான தொகையை இறக்குமதிக்கு செலவிட்டது. இயற்கை எரிவாயு படிமங்கள் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது எரிபொருள் இறக்குமதியில் இலங்கை தங்கியிருப்பதை குறைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதுமாத்திரமின்றி களஞ்சியப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. உள்நாட்டில் இயற்கை எரிவாயு கண்டெடுக்கப்பட்டுள்ளமை ஆனது தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்குகிறது. உள்நாட்டில் இயற்கை எரிவாயு தொழிற்துறையொன்றை நிறுவுவதன் மூலம் உள்நாட்டு வளங்களின் அனுகூலமான பயன்பாட்டை கொண்டு தேசிய பொருளாதாரத்திற்கான நன்மைகளை அதிகரிப்பது, என்.பி.என்.ஜி.-இன் வழிகாட்டுதல்களில் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

### *3.5 செயற்திறன் மிக்க ஒழுங்குபடுத்தல் விதிமுறைகளின் கீழ் தனியார் துறையின் பங்கேற்பை மேம்படுத்தல்*

*இயற்கை எரிவாயு துறை உள்ளிட்ட சர்வதேச எரிசக்தி சந்தையில் தனியார் துறை முக்கிய பாத்திரம் வகிக்கிறது. உலகளாவிய ரீதியில் இலாபம் ஈட்டும் பல தனியார் துறைகள் காணப்படுகின்றன. இலங்கையின் எரிசக்தி துறைகள் மீது அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்துவதால் பல தடைகளை எதிர்கொள்கின்றன. இயற்கை எரிவாயு தொழிற்துறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் தனியார் துறைக்கு பரஸ்பர நன்மை பயக்கும் வகையில் உற்பத்தி முறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு திறக்கப்பட்டுள்ளது. தனியார் துறையிலிருந்து அதிகபட்ச ஆதாயங்களை அடைய ஒரு பயனுள்ள ஒழுங்குமுறை மற்றும் கண்காணிப்பு ஆட்சி அவசியம். எனவு தேசிய பொருளாதாரத்தினதும் பொதுமக்களதும் நலன்களை மேம்படுத்துவதற்காக நன்கு வடிவமைக்கப்பட்ட ஒழுங்குமுறை ஆட்சியின் கீழ் தனியார் துறையின் பங்களிப்பை மேம்படுத்துவதன் மூலம் இந்த வாய்ப்பை கைப்பற்றும் நோக்கத்தை என்.பி.என்.ஜி. கொண்டுள்ளது.*

### *3.6 அனுகூலங்களை உள்ளடக்கிய வகையில் சந்தை கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் உச்சப்படுத்துதல்*

*எரிவாயு மதிப்பு சங்கிலியானது பல்வேறு பங்குதாரர்கள் அனுபவித்து வரும் நன்மைகள் ஒட்டுமொத்த திட்டத்தை தீர்மானிக்கும் சிக்கலான சந்தை கட்டமைப்புகளை உள்ளடக்கியது. இயற்கை எரிவாயு சந்தைகள் மீதான ஆய்வுகள், அதிக செறிவுள்ள செங்குத்தாக ஒருங்கிணைந்த கட்டமைப்புகளில் இருந்து தொழில்சார் நிறுவனங்களுக்கு வணிக நிறுவனங்கள் மத்தியில் திறந்த போட்டி இல்லாத சங்கிலிகள் கொண்ட பல்வேறு சந்தை கட்டமைப்புகளின் கீழ் செயல்பட முடியும் என்பதை நிறுவியுள்ளது. இது போட்டித்திறன் திறந்த சந்தை கட்டமைப்புகள், செறிவுட்டப்பட்ட சந்தை கட்டமைப்புகளை விட திறமையான மற்றும் சமமான விளைவுகளை உருவாக்கக்கூடும் என்று பொதுவாகக் கண்டறிந்துள்ளது. இலங்கையின் தற்போதைய சந்தை கட்டமைப்பு, அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் ஆதிக்கம் செலுத்தும் ஒரு செறிவு கட்டமைப்பை நோக்கியதாக உள்ளது. எனவே அரச ஏகபோகங்களை நோக்கி இருக்கும் போக்கிலிருந்து விலகி, இலங்கையில் எதிர்கால இயற்கை எரிவாயு அமைப்பின் கட்டமைப்பை பற்றிய சமநிலையான அணுகுமுறையை என்.பி.என்.ஜி. மேற்கொள்ளும். உள்ளூர் மற்றும் சர்வதேச நிலைமைகளை மாற்றியமைப்பதன் மூலம் தொழிற்துறை வளர்ச்சியின் பல்வேறு நிலைகளில் பொருந்தக்கூடிய உகந்த சந்தை கட்டமைப்புகளைத் தெரிந்து கொள்ள அது எதிர்பார்க்கிறது. இதனை செய்வதன் மூலம் தனியார் நிறுவனங்களின் செயற்திறன் பங்களிப்புடன் சந்தை போட்டியை மேம்படுத்துவதற்கு என்.பி.என்.ஜி. எப்போதும் முயற்சிக்கும்.*

## *4. கொள்கை அறிக்கை*

*இப்பிரிவானது இயற்கை எரிவாயு பற்றிய என்.பி.என்.ஜி.-இன் பிரதானம்சமாகும். இயற்கை எரிவாயுவை தொழிற்துறையின் மாற்று மூலப்பொருளாக அறிமுகப்படுத்துவதன் ஊடாக ஏற்படும் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு இயற்கை எரிவாயு தொடர்பான என்.பி.என்.ஜி.- இன் நோக்கு, இலக்கு, குறிக்கோள் ஆகியவற்றை அடையும் வகையில் இந்த கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவை பல் பொருளாதார துறைகளின் பயன்பாட்டிற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். பல் துறைகளில் இயற்கை எரிவாயுவை அறிமுகப்படுத்துவதன் மூலம் நன்கு திட்டமிடப்பட்ட கொள்கைகள் ஒவ்வொரு துறைக்குமான குறுக்கு வெட்டு தேவைகளையும் மற்றும் சிக்கல்களையும் தெரிவிக்கின்றன.*

*அதற்கமைய, இரு பரந்த பிரிவுகளின் கீழ் கொள்கை அறிக்கை முன்வைக்கப்படுகிறது.*

- *பல் பொருளாதார துறைகளில் இயற்கை எரிவாயு பாவனையின் மூலம் ஏற்படும் குறுக்கு வெட்டு தேவையை கையாளுகின்ற சிறு கொள்கை மற்றும்;*
- *பிரதான பொருளாதார துறைகளில் இயற்கை வாயுப் பயன்பாட்டின் துறை சார்ந்த குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்கான கொள்கைகள் (மின்சார துறை, போக்குவரத்து, தொழிற்துறை, வர்த்தக துறை, வீட்டுத்துறை, வர்த்தகத் துறை மற்றும் கப்பற் துறை போன்றன)*

### *4.1 பல் பொருளாதார துறைகளில் இயற்கை வாயுவை பயன்படுத்தி குறுக்கு வெட்டு தேவைகளை பூர்த்தி செய்வதற்கான கொள்கை*

*பல்துறைகளில் குறுக்கு வெட்டு தேவைகளை கையாள்வது தனியார் துறைகளில் இயற்கை வாயுவை ஊக்குவிப்பதற்கு முக்கிய காரணியாகும். இதில் இலாபத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியம் உள்ளது. குறுக்கு வெட்டு தேவைகளை கையாள்வதற்கான கொள்கைகள் நாட்டின் எரிவாயு துறையின் முதுகெலும்பாக விளங்குகிறது. குறுக்கு வெட்டு தேவைகள் பற்றிய கொள்கை அறிக்கைகள் எட்டு பரந்த பகுதிகளின்கீழ் வழங்கப்படுகின்றன. அவையாவன, இயற்கை வாயு உற்பத்தியை வளர்ப்பது மற்றும்*

விநியோகம் செய்தல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை, விலையிடல், நிறுவன ரீதியானஒழுங்குறுத்தல் மற்றும் கொள்கை கட்டமைப்பு, செயல்பாட்டு பாதுகாப்பு, திறன் மற்றும் உள்ளூர் உள்ளடக்க வளர்ச்சி மற்றும் நுகர்வு மற்றும் சந்தை வளர்ச்சி.

4.1.1 இயற்கை எரிவாயுவிற்கான மூல ஆதாரங்களை கண்டறிதல் மற்றும் விநியோகித்தல்

4.1.1.1 இயற்கை வாயு மதிப்புச் சங்கிலிகளில் ஈடுபட்டிருக்கும், மேல், நடுத்தர மற்றும் கீழ் நிலை நடவடிக்கைகளுக்கு பொருந்தக்கூடிய வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் உள்நாட்டு வளங்களிலிருந்து இயற்கை வாயுவை பெறுவதற்கான அணுகலை அரசாங்கம் இலகுபடுத்துகிறது.

4.1.1.2 இயற்கை மூலங்களிலிருந்து இயற்கை எரிவாயுவை உறிஞ்சுவதற்கு உயர்மட்ட நடவடிக்கைகள் எதிர்கால மேம்பாட்டாளர்களை தேர்ந்தெடுப்பது, சர்வதேச தரத்திற்கு இணங்கி உரிமம் பெற்ற நடைமுறைகளை பின்பற்றுதல், பரஸ்பர நலன்களுக்கான ஒப்பந்த ஏற்பாடுகளை உள்ளிடுவது போன்ற வெளிப்படையான செயல்முறையை பின்பற்றுவதன் மூலம் அடையப்படும்.

4.1.1.3 இயற்கை வாயுவை வர்த்தக நோக்கில் உற்பத்தி செய்வதற்கு, உயிரியல் வாயுவை அல்லது எந்த வடிவத்திலும் உள்ள உயிரியல் வாயுவை பெற்றுக்கொள்வதற்கு அரசு வசதிகளை செய்துகொடுப்பதோடு, இயற்கை வாயுவின் தரக்கட்டுப்பாட்டு நிர்ணய செயற்பாடுகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள போக்குவரத்து, களஞ்சியம், விநியோகம் மற்றும் நுகர்வு போன்றவற்றிற்கிணங்க உயிரியல் வாயுவை அல்லது எந்த வடிவத்திலும் உள்ள உயிரியல் வாயு சம்பந்தமான பொருட்களின் விநியோக மார்க்கங்களுக்கு எந்த வித பாதகமுமில்லாது அரசு சகல வசதிகளையும் செய்து கொடுக்கும்.

4.1.1.4 உள்நாட்டு மூலவளமான இவ் வாயுவானது, உள்நாட்டு கேள்வியினை பூர்த்திசெய்வதோடு, ஏற்றுமதிச் சந்தைக் கேள்வி, கப்பல்களுக்கான கப்பல் எண்ணெய்த் தேவை மற்றும் ஒவ்வொரு குழுவினதும் வழங்கல் தேவைகளையும் பூரணமாக பூர்த்திசெய்யக் கூடியதாக உள்ளதோடு நாட்டின் பொருளாதாரத்திற்கும் உச்சளவிலான நன்மைகளையும் பெற்றுத்தருவனவாக இருத்தல் வேண்டும்.

4.1.1.5 மின்சக்தி, போக்குவரத்து, கைத்தொழிற்துறை, வர்த்தகம் மற்றும் வீட்டுத்துறைக்குத் தேவையான கேள்வியை பூர்த்தி செய்யும் பொருட்டு, இயற்கை வாயுவை அல்லது எந்த வடிவத்திலான இயற்கை வாயுவை (LNG, CNG மற்றும் ஏனையவை) இறக்குமதி செய்து அதாவது உள்நாட்டு வளங்களிலிருந்து தடங்கலில்லாத வழங்கலை தொடர்ச்சியாகப் பேணும் பொருட்டு நடுத்தர மற்றும் கீழ் நிலை செயற்பாடுகளை நிறுவுவதற்கு அரசு சகல வசதிகளையும் செய்துகொடுக்கும்.

4.1.1.6 இயற்கை எரிவாயு இறக்குமதியானது விநியோகத்திற்கான முக்கிய துணை மூலமாக பார்க்கப்படும்.

- உள்நாட்டு வளங்களிலிருந்து வணிக ரீதியிலான விநியோகங்களை மேற்கொள்வதற்கு முன்பாக உள்நாட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
- உள்நாட்டு மூலங்களின் வழங்கலின் ஏற்ற இறக்கங்களை தவிர்ப்பதன் மூலம் தடையற்ற விநியோகத்தை உறுதிபடுத்தல்.
- உள்நாட்டு எரிவாயு தொழிற்துறையில் ஆரோக்கியமான போட்டித்தன்மையை ஏற்படுத்துவதற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலை பேணப்படல் வேண்டும்.

4.1.1.7 இலங்கையில், அரச மற்றும் தனியார் துறைகளால் முன்னெடுக்கப்படும் இயற்கை வாயுவுக்கான பெறுகை, முனையச் செயற்பாடுகள், களஞ்சியம், விநியோகம் மற்றும் நுகர்வுகள் போனறவற்றை உள்ளடக்கிய பெறுமதிச் சங்கிலி இலங்கையின் சக்திவளப் பாதுகாப்பு மற்றும் தேவைகளை உறுதிசெய்வதோடு அதன் மூலோபாயங்களை பிராந்தியளவிலும் சர்வதேச ரீதியிலும் அதிகரிக்கச்செய்தல் வேண்டும்.

*4.1.1.8* இறக்குமதி செய்யப்படும் LNG வழங்கல்கள் அரசுடமை நிறுவனங்களினாலோ அல்லது தனியார் நிறுவனங்களினாலோ முன்னெடுக்கப்படும் போது இவை பெற்றோலிய விடயப்பரப்பின் கீழ் வரும் அமைச்சின் ஊடாக அனைத்து மேலே 4.1.1.7 இல் கூறப்பட்ட விடயங்களையும் அரசு முகாமைத்துவம் செய்யும்.

- ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திரவ இயற்கை எரிவாயு விநியோகஸ்தர்களுடன் நேரடி போச்சுவார்த்தையில் ஈடுபடல். (அரசாங்கத்துடன் அரசாங்கம் அல்லது வேறு).
- நடுத்தர அல்லது நீண்ட கால[1] விநியோகத்திற்காக திரவ எரிவாயு விநியோகஸ்தர்களிடமிருந்து சர்வதேச போட்டி விலை மனு கோரல்.
- குறுகிய கால விநியோகத்திற்கான விலை மனு கோரப்பட்டதைத் தொடர்ந்து உடனடி திரவ எரிவாயுவை சந்தையிலிருந்து நேரடி கொள்முதலில் ஈடுபடல்.

*4.1.1.9* அரச மற்றும் அரசுடமையான நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ள, இயற்கை வாயு பெறுகை கொடுப்பனவுகள் அனைத்திலும் போட்டித் தன்மையும் வெளிப்படைத் தன்மையும் அரசினால் கடைபிடிக்கப்படும். LNG சர்வதேச சந்தையில் இவ் ஒப்பந்திற்காக பேரம்பேசும் பொழுது, இலங்கையின் போட்டி அனுகூலங்களுக்காக விலை, பெறுகை நேரம், தொகை, தரம் போன்ற பிரதான காரணிகள் கவனத்தில் கொள்ளப்படும்.

*4.1.1.10* நாட்டின் ஹைட்ரோகாபன் படிமங்களை முன்னுரிமை அடிப்படையில் வர்த்தகமயப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது இலங்கை நாட்டிற்குள் உற்பத்தி செய்யப்படும் இயற்கை வாயுவுக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்படும். இலங்கை அரசிற்கும் மூன்றாம் நபருக்கும் இடையில் இயற்கை வாயுவை இறக்குமதி செய்வது தொடர்பான ஒப்பந்தங்களில் ஈடுபடும் பொழுது இலங்கையின் நலனை பிரதிபலிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்ளூர் வாயு அகழ்வினையும் மற்றும் அதனை வர்த்தகமயப்படுத்துவதற்குமே முன்னுரிமை அளித்தல் வேண்டும். உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை வாயுவுக்கு வர்த்தக ரீதியில் சந்தைவாய்ப்புக்களை உறுதிசெய்வதோடு காலத்திற்கு காலம் திரும்பவும் பேரம்பேசுதல் என்ற சந்தர்ப்பத்தில் எந்த வடிவத்திலும் இறக்குமதி செய்யப்படும் இயற்கை வாயுவுக்கான தொகை, விலை மற்றும் வழங்கல் காலம் தொடர்பாக பேரம்பேசுவதோடு நெகிழ்ச்சியான ஒப்பந்தத்தில் ஈடுபடுதல்.

*4.1.1.11* அமைச்சு மற்றும் வகைப்படுத்தப்பட்ட அதிகாரம் பெற்ற நிறுவனங்ளினால் இணங்கப்பட்ட இறக்குமதி வழங்கலுக்கு அதாவது நாட்டின் சுற்றாடலுக்கு பாதகமில்லாததும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களிளால் தனியான முன்னெடுக்கப்படாததுமானவற்றிற்கு அரசு அனுமதியினை வழங்கும்.

### *4.1.2* உட்கட்டமைப்பு அபிவிருத்தி

*4.1.2.1* அரச, தனியார் மற்றும் அரச தனியார் பங்குடமையால் முன்னெடுக்கப்படும் இயற்கை வாயு அபிவிருத்தி தொடர்பான இயற்கை வாயு அபிவிருத்தி கட்டமைப்புக்களுக்கு முன்னுரிமை அளித்து ஊக்கப்படுத்துவதோடு அதனை அரசு மேலும் ஊக்குவிக்கும்.

*4.1.2.2* இலங்கையில் தற்போதுள்ள கொள்கைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள், சர்வதேச தர நிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இயற்கை எரிவாயு/ திரவ இயற்கை எரிவாயு ஆகியவற்றின் செயலாக்க, திரவமாக்கல், சேமிப்பு, போக்குவரத்து மற்றும் விநியோகம் தொடர்பான அனைத்து உள்கட்டமைப்பு செயற்பாடுகளையும் அங்கீகரித்தல், மேற்பார்வை செய்தல், கண்காணித்தல், அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும்.

[1] **2** தொடக்கம் 5 வருடத்திற்கு இடையிலானது நடுத்தர காலம், 2 வருடத்திற்கு குறைந்தது குறுகிய காலம் மற்றும் 5 வருடத்திற்கு மேற்பட்டவை நீண்டகாலம் (2017 ஆம் ஆண்டு சர்வதேச வாயு ஒன்றியத்தின் அறிக்கை)

*4.1.2.3* அரசாங்கத்தின் சார்பில் கீழ்வரும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பெற்றோலிய துறை ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சே பொறுப்பானதாகும். அரச மற்றும் தனியார் துறை இரண்டும் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குறுத்தல்கள், தர நிலைகள் என்பவற்றை கடைப்பிடித்தல் வேண்டும்.

*4.1.2.4* நடுத்தர மற்றும் கீழ் நிலை தொழிற்துறைகளான, இயற்கை வாயு சந்தையில் போட்டித் தனமையை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாம் நபரும் இதில் எவ்வித பாகுபாடும் இல்லாது மற்றும் வெளிப்படைத்தன்மையுடனும், பிரதான உட்கட்டுமான வசதிகள், குழாய்கள் உள்ளடங்கலான, களஞ்சிய தாங்கிகள், பெற்றுக்கொள்ளும் முனையங்கள் மற்றும் மீள வாயுவாக்கல் பகுதிகள் போன்றவற்றில் திடசங்கற்பத்துடன் பங்குபற்றுவதற்கான வழியை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

*4.1.2.5* இவ் வசதிகளை நிறுவும்போது, இடம், வகை மற்றும் உடனடியான மற்றும் எதிர்காலக்கேள்வி மற்றும் நிறுவனங்களின் நிதி மற்றும் பொருளியல் சாத்தியப்பாடுகள் போன்றவற்றிற்கிணங்க சிறந்த தெரிவுகளை தீர்மானிப்பதற்கான சுற்றாடல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடுகளை (ESIA) உள்ளடக்கியதான விரிவான சாத்தியவளக் கற்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். வெவ்வேறுபட்ட மற்றும் மாற்றுத் தெரிவுகளை மதிப்பீடு செய்து, இந் நிறுவனங்களுக்கு பொருந்தக்கூடிய சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தர பிரமாணங்களுக்கேற்ப சிறந்த மாற்றுத் தெரிவை தீர்மானித்தல் வேண்டும்.

### *4.1.3* சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை

*4.1.3.1* அரச மற்றும் தனியார் துறைகளின் கீழ் முன்னெடுக்கப்படும் அனைத்து கட்டுமானங்கள், அபிவிருத்திகள் மற்றும் சக்தி உற்பத்தி, போக்குவரத்து, தொழிற்துறை, வீட்டு மற்றும் களஞ்சிய செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆகியன இலங்கையில் காணப்படும் சுற்றுச்சூழல் சட்டங்கள், ஒழுங்குறுத்தல்கள் மற்றும் தரநிலைகளுடன் காணப்படுவதை அரசாங்கம் உறுதிசெய்தல். சுற்றுச்சூழலுக்கு மிகக்குறைந்த பாதிப்பை ஏற்படுத்துவதை உறுதிபடுத்தும் வகையில் இவை அமுல்படுத்தப்பட்டுள்ளன.

*4.1.3.2* சுற்றாடல் பாதிப்பை குறைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிபடுத்துவதற்கு உரிய ஒழுங்குறுத்தல் நிறுவனங்களான மத்திய சுற்றாடல் அதிகாரசபை, கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் மாகாண சுற்றாடல் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் பெற்றோலிய துறைக்கு பொறுப்பான அமைச்சு ஆலோசனைகளை நடத்தி ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

*4.1.3.3* பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்தும்போது சாத்தியமான சுற்றாடல் பிரச்சினைகள், உரிய ஒழுங்குறுத்தல் நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் அமைச்சு புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தும்.

*4.1.3.4* இயற்கை வாயு அபிவிருத்தி சார்ந்த, கடல், கரையோர சூழலியல் முறை மற்றும் அனைத்து பெறுமதிச் சங்கிலி ஈடுபாடுகள் உள்ளடங்கிய சிக்கலான ஈடுபாடுகளுள்ள மிகப் பெரிய நிறுவனங்களுக்கு மூலோபாய சுற்றாடல் மதிப்பீடுகளை (EIA) நேரடியாக மேற்கொள்வதற்கு அரசு ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளும்.

### *4.1.4* விலை நிர்ணயம்

மின்சக்தித் துறை கைத்தொழில் வளர்ச்சிக்கான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் அத்தகைய முதலீடுகளை நிலைபெறச் செய்வதற்கும் விநியோகத் தரப்புகளுக்கு அவற்றின் முதலீடுகள் மீதான போதிய வருமான புறழ்வுக்கு உத்தரவாதமளிக்கின்ற அதே நேரத்தில், மின்சார நுகர்வோருக்கு அவர்களால் சுமக்கக்கூடிய விலைகளை உறுதிசெய்வதை இலக்காகக்கொண்டு, சுதேசிய சக்தி மூலங்களிலிருந்தும் அதே நேரம் இறக்குமதி செய்யப்பட்ட திரவ இயற்கை வாயு எரிபொருள் (LNG) சக்தி மூலத்திலிருந்தும் மின்சார விநியோகங்களை உள்ளடக்கி இயற்கை எரிவாயுவுக்கு அரசாங்கம் விலை நிர்ணய சூத்திரத்தின் அடிப்படையிலான ஒரு கொள்கையை பின்பற்றும்.

4.1.4.1 விலை நிர்ணய கொள்கை கீழ்க்காணும் முக்கியமான நிர்ணயங்களின் அடிப்படையில் அமைந்திருக்கும் :

- வழங்கலுக்கு ஆகும் செலவு: உற்பத்தி, பரிவர்த்தனை, களஞ்சியம், பகிர்ந்தளிப்பு ஆகியவற்றின் ஆகுசெலவையும் மற்றும் முதலீடு மீதான நியாய புறழ்வு வீதத்தையும் பிரதிபலிக்கும் வகையில், எரிவாயுவுக்கு விலை நிர்ணயித்தல்.

- நியம சுட்டிகள் : வாயுவின் விலை, பிராந்தியத்தில் [2] நிலவுகின்ற விலைகளுடன் ஒப்பிடும் போது உள்ளூர் ரீதியில் போட்டித் தன்மை வாய்ந்ததாகக் காணப்படுதல்.

- வழங்கல் சங்கிலி மூலமான வர்த்தகத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களினால் வரும் வரிகள் மற்றும் கட்டணங்கள்.

- LNG வழங்கல் உடன்படிக்கை தொடர்பான இலங்கை அரசின் ஏனைய மூலோபாயங்கள்.

4.1.4.2 மேற்குறித்த கூற்றுக்கள், இறுதியாக நுகர்வோரை வந்தடைவதற்கு முன்னர், வித்தியாசமான பாவனைகளுக்காக கிடைக்கக்கூடிய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் இயற்கை வாயு விலையை கட்டமைப்பதற்கான பொது வழிகாட்டல்களை விவரிக்கின்றன. எரிவாயுவை பல துறைகளில், பல வழிகளில், உம்: உந்து சக்திக்கு (மின் உற்பத்தி, போக்குவரத்து, கைத்தொழில்), அனல் சக்தி (வீடுகள், கைத்தொழில்) மற்றும் உணவுக் களஞ்சியம் (கைத்தொழில்) பாவிக்கலாம். இறுதிப் பாவனையை பொறுத்து, இயற்கை எரிவாயுவின் விலை வித்தியாசப்படலாம். விஷேட பாவனைகளுக்கான எரிவாயுவின் விலை நிர்ணயம் தொடர்பான விஷேட வழிகாட்டல்கள், அந்தந்த பாவனைகளுக்கான எரிவாயு விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய துறை சார்ந்த விஷேட வரையறைகளை மீளாய்வு செய்வதன் மூலம் நிர்ணயிக்கப்படும்.

4.1.4.3 இயற்கை வாயுவுக்கான, வெளிப்படைத்தன்மை மிக்கதும் பக்கச்சார்பில்லாததுமான விலையிடல் முறையையும் மற்றும் இயற்கைவாயுவை சந்தைப்படுத்துவதற்குத் தேவையான நடுத்தர மற்றும் கீழ் நிலை தொழிற்துறைக்குத் தேவையான உட்கட்டுமான வசதிகளையும் இலங்கைப பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நிறுவும். நடைமுறை நோக்கங்கள், இயற்கை வாயு வழங்கல் சங்கிலிக்கு பொருந்தும் ஒழுங்குமுறைகளை உறுதிப்படுத்தும் வகையில் கட்டுப்படுத்தும் விலைகள், கண்காணிப்பு விலைகளிலிருந்து சில வேளைகளில் மாறுபடலாம்.

4.1.4.4. இயற்கை வாயு வலைப்பின்னலுக்கு உயிரியல் மெதேன் அல்லது ஏதாவது வடிவத்திலுள்ள உயிரியல் மெதேன் வாயுவுக்கு வரியினை உள்ளடக்குவதோடு Feed-in-tariff) மற்றும் புதுப்பித்தக்க மூலகத்திலிருந்து வாயுவை உற்பத்தி செய்வதை "மூலாதார உத்தரவாதத்தின்" (gurantee of origion) மூலம் சான்றுதிறுப்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

4.1.5 **நிறுவனம், சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு :**

4.1.5.1. ஒட்டுமொத்த இயற்கை எரிவாயு பெறுமான சங்கிலியுடன் தொடர்பான சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கி, நிறுவனம் சார் கட்டமைப்புடன் கூடிய ஏற்கனவேயுள்ள சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்துகை வேலைச் சட்டகத்தை, அரசாங்கம் மீளாய்வு செய்யும். மீளாய்வில் இனங்காணப்படும் இடைவெளியின் அடிப்படையில், எரிவாயுவின் விநியோகம், களஞ்சியம், பகிர்ந்தளிப்பு மற்றும் நுகர்வு என்பவற்றுடன் தொடர்புடைய சகல வகையான செயற்பாடுகளினதும் திருப்தியான இயக்க நடவடிக்கைக்கு உதவும், உள்ளூர் ரீதியில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயுவையும் மற்றும் இறக்குமதி வடிவில் கிடைக்கும் அத்தகைய இயற்கை எரிவாயுவையும் கூட்டிணைப்பதற்கு அவசியமான தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், அதே நேரம் புதிய சட்ட ஏற்பாடுகள் என்பவற்றுக்கான திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

---

[2]. **இலங்கையானது சிறிய மற்றும் வளரும் சந்தையாகும் அத்துடன் எங்களது விலைகள் பாரிய மற்றும் வளர்ச்சியடைந்த இறக்குமதியாளருடன் ஒப்பிடல் ஆகாது.**

*4.1.5.2.* ஏற்கனவேயுள்ள சட்டங்களுக்கு திருத்தங்களைக் கொண்டுவருவதிலும் மற்றும் புதிய சட்ட ஏற்பாடுகளை வகுத்தமைத்தலும் பின்வரும் அம்சங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

- பிரவேசத்திற்கு அதிகாரம் அளித்தல்:எரிவாயு கைத்தொழிலின் உயர், நடுத்தர மற்றும் கீழ்நிலை ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அங்கீகாரங்கள், அனுமதிகள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றை வழங்குதல்.

- காணிக் குத்தகை மற்றும் உபகரண வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

- இறமை தொடர்பான எல்லைப் பிணக்குகள், அரச முதலீடு தொடர்பான பிணக்குகள், வர்த்தகம் தொடர்பான பிணக்குகள், மனித உரிமைகள் மற்றும் சுற்றாடல் தொடர்பான பிணக்குகள், விலை நிர்ணயம் பற்றிய பிணக்குகள், உட்கட்டமைப்பு மற்றும் நிர்மாணம் தொடர்பான பிணக்குகள் தவிர்ந்த, ஏனைய பிரிவுகளை உள்ளடக்குகின்ற இலங்கையிலுள்ள சட்டங்களுக்கு அமைவாகவும் மற்றும் சர்வதேச நடைமுறைகளுக்கு இணங்கவும், நடுத்தீர்ப்பு மூலமாக பிணக்குகளைத் தீர்த்தல்.

- நடுத்தீர்ப்புகளிலிருந்து வரும் பாதிப்புகள் மற்றும் இலங்கையிலுள்ள சட்டத்தின் கீழ் வருகின்ற அந்தந்த விலைமதிப்பீட்டு முறைகள் மற்றும் நஷ்டஈட்டு நியமங்கள்.

*4.1.5.3* இயற்கை எரிவாயு கைத்தொழிலின் உயர், நடுத்தர மற்றும் கீழ்நிலை செயற்பாடுகளின் வினைத்திறன் வாய்ந்த முகாமைத்துவத்திற்கும் மற்றும் அவற்றின் செயற்படுத்துகைக்கும். அரசாங்கம் காத்திரமான ஒரு ஒழுங்குறுத்தும் வேலைச்சட்டகத்தைத் தாபிக்கும். அங்கீகாரங்கள், அனுமதிகள், அனுமதிப்பத்திரங்கள், சுதேசிய எரிவாயுக்கான பிரவேச உரிமைகள், LNG/CNG வசதிகளுக்கு தேவையான காணிகளையும் மற்றும் உபகரணங்களையும் குத்தகைக்கு வழங்குதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் என்பவற்றுக்கான பிரவேசம், வரிக் கட்டமைப்பு, (டோலிங் வரி மற்றும் புறழ்வு வரிகள், திரவ இயற்கை வாயு களஞ்சியத்திற்கான வரி, விலைகள் மற்றும் கட்டணங்கள்), இயற்கை மற்றும் LNG வாயுக்களை தேடிக்காணுதல், அறிக்கையிடும் தேவைப்பாடுகள், எரிவாயு விலை நிர்ணயம், எரிவாயு பரிவர்த்தனை மற்றும் பகிர்ந்தளிப்பு, தரம் மற்றும் நியமம், சுகாதார மற்றும் பாதுகாப்பு அம்சங்கள், வருமான முகாமைத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட அம்சங்கள், கைத்தொழில் நிருவாகம் மற்றும் ஒழுங்குறுத்துகை என்பன, ஏனையவற்றுக்கு மத்தியில் இந்த ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகத்தில் உள்ளடங்கியிருக்கும்.

*4.1.5.4* NG மற்றும் LNG ஆகியவற்றின் ஒழுங்குறுத்தும் அதிகாரத் தரப்பாக அத்தகைய ஒழுங்குறுத்துகைப் பணியை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைப்பதற்காக அமைச்சரவை உடன்பட்டவாறு, ஏனைய கைத்தொழில்களுக்கு மத்தியில், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் (இ.பொ.ப.ஆ.) ஒழுங்குறுத்தப்படும் கைத்தொழில்களில் பெற்றோலிய கைத்தொழிலையும் உள்ளீர்க்கும் வகையில், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இயற்கை எரிவாயு சந்தையின் நடுத்தர மற்றும் கீழ்நிலை பிரிவுகளின் ஒழுங்குறுத்தும் அதிகாரத் தரப்பாக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நியமிக்கப்படும்.

*4.1.5.5* இலங்கையில் எரிவாயுவுடன் சம்பந்தப்பட்ட வியாபார நடவடிக்கைகளின் தாபிப்பு, LNG வசதிகள் நிர்மாணம், சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், LNG நிறுவுகைகள் சார்ந்த செயற்பாடுகள், இலங்கையின் ஆள்புலத்தினுள் வரும் LNG வசதிகளின் செயற்பாடுகளை மூடுதல் மற்றும் மீளப்பெறுதல் முதலிய விடயங்களை முகாமைசெய்யும் நிமித்தம் அனுமதிப்பத்திரங்களையும் அனுமதியையும் வழங்கும் நடைமுறை செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

*4.1.5.6* பொருத்தமானவாறு சுதேசிய எரிவாயு உற்பத்தி, அபிவிருத்தி, உரித்துடமை மற்றும் LNG வசதிகளின் செயற்பாடுகள் மற்றும்/அல்லது உள்ளக ரீதியான எரிவாயு களஞ்சியம், குழாய்மார்க்கமாக எடுத்துச்செல்லல் மற்றும் பகிர்ந்தளிப்பு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுதேசிய எரிவாயு அகழ்வு என்பன அடங்கலாக, வர்த்தக ரீதியில் பயனுள்ள உயர், நடுத்தர மற்றும் கீழ்நிலை கருத்திட்டங்களில் அரசாங்கமும் மற்றும் இலங்கையின் வியாபார

சமூகமும் பங்குபற்றுவதை இயலச்செய்கின்ற தனியார் மற்றும் பொது பங்காளித்துவத்தில் (PPP) பங்குகொள்ளும் நிமித்தம், இலங்கையில் நிறுவன சார் வேலைச்சட்டகத்தினுள், ஒரு பாராளுமன்ற சட்டத்தினால் அதிகாரத்தத்துவம் அளிக்கப்படும் “தேசிய எரிவாயு கம்பனி” என்ற பெயரில், அரசாங்கம் தனியான கூட்டிணைந்த ஒரு அமைப்பை தாபிக்கும்.

4.1.5.7. அரசாங்கம், ஏற்புடைய நிதி மற்றும் ஏனைய ஒழுங்குறுத்துகை தகவுதிறன்களை அனுசரித்துவியாபார நடவடிக்கைகளின் ஒழித்துக்கட்டல், வருமானம், தேறிய பெறுமானம் மற்றும் 4.1.5.6 ஆம் பிரிவுடன் தொடர்புடைய வியாபார ஸ்தாபன நடவடிக்கைகளில் சம்பந்தப்படும் உரிய உள்நாட்டு (PPP) பங்காளர்களின் செயற்பாடு ரீதியான ஆற்றலின் சுட்டியாக விளங்குகின்ற ஏனைய பொருத்தமான கூட்டிணைந்த தகவுதிறன்கள் என்பவற்றின் மீதான ஆகக்குறைந்த ஆரம்ப வரையறைகளை நிர்ணயித்து குறிப்பீடுசெய்யும்.

4.1.5.8 வினைத்திறன் வாய்ந்த செயற்பாட்டமைப்பு, நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல் என்பவற்றினூடாக அனுகூலமான பயன்களை அடையும் பொருட்டு NPNG இன் வெற்றிகரமான செயற்படுத்துகையை நோக்கி பணிக்கப்பட்டுள்ள முக்கியமான நிறுவனங்களின் வகிக்கும் பங்குகளையும் மற்றும் பொறுப்புக்களையும் தெளிவாக இனங்காணுவதன் மூலமாக, அரசாங்கம் பயனுள்ள வினைத்திறன் வாய்ந்த ஒரு நிறுவன சார் வேலைச்சட்டகத்தை தாபிக்கும். அத்தகைய நிறுவன சார் வேலைச்சட்டகம் பிரதானமாக பின்வரும் அம்சங்களில் ஒருமுகப்பட்டிருக்கும்.

- ஒவ்வொரு நிறுவனத்துடனும் ஏற்படும் பிணக்கை அல்லது நிகழும் இரட்டைச்செயலை தவிர்த்து, சுமுகமான தொழிற்பாட்டின் நிமித்தம் நிறுவனங்களின் வகிபங்குகளையும் மற்றும் பொறுப்புக்களையும் இனங்கண்டு அந்த நிறுவனங்களுக்கு அத்தகையவற்றை சாட்டுதல்.

- நிறுவன சார் வேலைச்சட்டகத்தினுள் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல் ஆகியன பற்றிய நேர்த்தியான உபாயங்களை/பொறிமுறைத் திட்டங்களை தயாரித்தல்.

- புதிய அபிவிருத்திகளின் மூலமாக அவசியம் என தேவைப்படுத்தப்பட்ட மேலதிக தகவல் தேவைப்பாடுகளை அவ்வப்பொழுது மீளாய்வு செய்தல்.

- எரிவாயு பெறுமான சங்கிலியில் சம்பந்தப்படும் சகல தரப்புகளுக்கு இடையிலும் வெளிப்படைத்தன்மையையும் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையையும் வலுப்படுத்துதல்.

4.1.5.9. NPNG தொடர்பான உத்தேச தலையீட்டு நடவடிக்கைகளின் வினைத்திறன் வாய்ந்த மற்றும் காலத்திற்கேற்ற செயற்படுத்துகையை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டுமின்சக்தி, போக்குவரத்து, கைத்தொழில் துறைகள், வீட்டுத் துறைமற்றும் வர்த்தகத் துறை ஆகிய சகல பிரதான துறைகளிலுமுள்ள செயற்பாடுகளை உள்ளடக்கி ஒரு எரிவாயு பயன்பாட்டு தலைமைத் திட்டம் (GUMP) தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படும்.

### 4.1.6 செயற்பாடு ரீதியான பாதுகாப்பு

4.1.6.1 ஆபத்தான சம்பவங்களின் போது மக்களுக்கு ஆகக்குறைந்த இடர், அதாவது ஆகக்குறைந்த அசௌகரிகம் ஏற்படக்கூடிய வகையில், LNG கண்டுபிடிப்பு, கையாளுகை, திரவமாக்கல், சுத்திகரித்தல், அனுப்புதல், இறக்குமதி செய்தல், மற்றும் இயற்கை எரிவாயுவை மீள்எரிவாயுவாக்கல், உருளைகளில் அடைத்தல், களஞ்சியப்படுத்துதல், பகிர்ந்தளித்தல் மற்றும் நுகர்வு முதலிய சகல செயற்பாடுகளும் இலங்கையிலுள்ள சட்டங்களை அனுசரித்து, பொருத்தமான உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புகளினாலும் மற்றும் வகைப்படுத்தும் சங்கங்களினாலும் வெளியிடப்பட்ட உயர்ந்த பாதுகாப்பு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்துகொள்ளும் முகமாக, அரசாங்கம் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளும்.

4.1.6.2 இது, பின்வருவனவற்றை அனுசரிப்பதற்கு உரிய தரப்புகளை தேவைப்படுத்தும்.

- முகப்பு இறுதிப் பொறியியல் மற்றும் வடிவமைப்பு (FEED), பொறியியல், கொள்வனவு மற்றும் நிர்மாணம் (EPC), உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தல் மற்றும் இயக்கச்செயற்பாடு, பராமரிப்பு மற்றும் அகற்றுதல் என்பன அடங்கலாக விநியோக சங்கிலி கருத்திட்டங்களுக்கு பொருத்தமான செயற்பாடுகள் பற்றிய முழுமையான சுகாதார, சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு தாக்க மதிப்பீட்டை (HESIA) மேற்கொள்ளல்.

- ஆபத்துக்கள், நம்பத்தகுந்த விபத்து நிலைமைகள், விளைவுகள் மற்றும் தொடர்பு நிகழ்தகவுகள் என்பவற்றை இனங்கண்டு, மதிப்பிடும் பொருட்டு கணிய ரீதியான இடர் மதிப்பீட்டு ஆய்வை (QRA) மேற்கொள்ளல்.

- அயல் பிரதேசங்களிலுள்ள மக்களினதும், சொத்துக்களினதும், சுற்றாடலினதும் மற்றும் இலங்கை ஆள்புலத்தில் கடல் போக்குவரத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு இடர் மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல்.

- அனுப்புகை, களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் பாவனை என்பவற்றுடன் தொடர்புடைய பொறித்தொகுதிகளையும்மற்றும் இயந்திராதிகளையும், குழாய்நீர் மார்க்க வலையமைப்புகளையும் மற்றும் நுகர்வோர் நிறுவுகை முறைமைகளையும் இயக்கும் சகல தரப்புகளுக்கும் பயிற்சியை வழங்குதல்.

- இயற்கை எரிவாயுவை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் மற்றும் இறக்குமதி செய்யும் தரப்புகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

- சர்வதேச தேவைப்பாடுகளினதும் மற்றும் கடல் சார் நியமங்களினதும் பிரகாரம், ஒவ்வொரு இயற்கை எரிவாயு நிறுவுகையிலும் பாதுகாப்பு வலயங்களை தாபித்து, அத்தகைய வலயங்களை பிரகடனப்படுத்துதல்.

- இயற்கை எரிவாயு தொடர்பான செயற்பாடுகளிலிருந்து எழக்கூடிய பாதகமான தாக்கங்களை தவிர்ப்பதற்கும் மற்றும் தனிப்பதற்கும் இடர் முகாமைத்துவ முறைமைகளை நிறுவுதல்.

- ஊழியர்கள், பாவனையாளர்கள் மற்றும் ஆபத்தான நிலைமைகளில் பாதிக்கப்படும் மூன்றாம் தரப்புகள் அடங்கலாக பாதிப்புக்குள்ளாகக்கூடிய தரப்புகளை அணவும் பொருட்டு பொருத்ததான காப்புறுதி அணவலை பெற்றுக் கொள்ளல்.

4.1.6.3 அரசாங்கம், தேவை எனக் காணும் சந்தர்ப்பத்தில், நாட்டில் உள்ளூர் ரீதியாக உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயுவினதும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் எரிவாயுவினதும் தரம், இயற்கை எரிவாயு களஞ்சிய முனையங்கள், இயற்கை எரிவாயுவை எடுத்துச் செல்வதற்காக அமைக்கப்படும் குழாய்மார்க்கங்கள், நுகர்வோருக்கு இயற்கை எரிவாயுவை பகிர்ந்தளிப்பதற்காக அமைக்கப்படும் குழாய்மார்க்க வலையமைப்புகள் என்பன தொடர்பில் கட்டாயமாக அனுசரிக்கப்பட வேண்டிய, இலங்கை நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நியமம் சார்ந்த தகவுதிறன்களை அறிமுகப்படுத்துவதற்கு, தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

4.1.6.4 பாதுகாப்பு அம்சங்கள மற்றும் இலங்கை அரசு அங்கீகரித்து குறிப்பீடுசெய்துள்ள சட்டமுறையான பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளை அனுசரிக்காமல் உள்ளூர் ரீதியாக இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்யும் மற்றும் இறக்குமதி செய்யும் எவரேனும் நபருக்கு எதிராக அதனை குற்றம் எனக்கொள்ளல் ஆகியன தொடர்பில், தேவையான சட்ட ஏற்பாடுகளையும் மற்றும் ஒழுங்குவிதிகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தும்.

*4.1.6.5* உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் இயற்கை எரிவாயு வசதிகள் அமைந்திருக்கின்ற மாநகர அல்லது உள்ளூராட்சி மன்ற பிரிவுகளிலுள்ள தீ பாதுகாப்பு வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும் மற்றும் பொது பாதுகாப்பு வசதிகளையும் வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளையும், அரசாங்கம் மேற்கொள்ளும்.

### *4.1.7* நுகர்வையும் மற்றும் சந்தை அபிவிருத்தியையும் ஊக்குவித்தல்

*4.1.7.1* மின்சார உற்பத்தி, கைத்தொழிலில் அனல் சக்திப் பிரயோகங்கள், போக்குவரத்து, வீடுகள் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள், மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்கான மூலப்பொருளாக (உ+ம்: உரம், மெதனோல், எத்தனோல் மற்றும்/பார்மால்டிஹைடு) போன்ற பல பொருளாதார ரீதியான பாவனைகளில், இயற்கை எரிவாயுவின் பாவனையை, அரசாங்கம் காத்திரமாகவும் மற்றும் துல்லியமாகவும் ஊக்குவிக்கும்.

*4.1.7.2* இதனை அடையும் பொருட்டு, இயற்கை எரிவாயு வியாபாரத்தில் இலங்கை ஸ்தாபனங்களை பயனுள்ள விதத்தில் பங்குபற்றச் செய்யும் வகையில், இயற்கை எரிவாயுவுக்கான போட்டித்தன்மையையும் மற்றும் அதன் வினைத்திறன் வாய்ந்த உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளையும் தாபிப்பதற்கு வசதியளிக்கும் நிமித்தம், திறமுறை சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க, வித்தியாசமான துறைகளில், இயற்கை எரிவாயுவின் பாவனையை ஊக்குவிப்பதற்கு, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- விரைவில் இயற்கை வாயுவுக்கு மாற்றக்கூடிய வாகனங்கள் அடங்கலாக இறக்குமதி செய்யப்படுகின்ற எரிவாயுவில் இயங்கும் பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள் என்பவற்றுக்கு எரிவாயுவை பயன்படுத்தும் கைத்தொழில்களுக்கு வரித் தீர்வையையும் மற்றும் ஏனைய வரிச் சலுகைகளையும் வழங்குதல்.

- தமது அனல் சக்தி உற்பத்தி அலகுகளை எண்ணெய்யிலிருந்து எரிவாயுவுக்கு மாற்ற விரும்புகின்ற கைத்தொழில்களுக்கு தொழில்நுட்ப உதவிகளையும் மற்றும் நிதி உதவிகளையும் வழங்குதல்.

- இயற்கை வாயுவுக்கு மாற்றுவதற்கான தொழில்நுட்பப் பெறுகையை உரிய அரச முகவர்நிலையங்களினூடாக தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலமாக துரிதப்படுத்துதல்.

- ஏனைய கனிய எண்ணெய்களின் இயக்கத்திலிருந்து மாற்றுவதில் அக்கறையுடைய வாடிக்கையாளர் தரப்புகளுக்கு உள்ளூர் ரீதியாக உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் இயற்கை வாயுவை விநியோகிப்பதற்கு தேவையான சட்டமுறையான மற்றும் நிறுவன உதவியையும், பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்களையும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் கட்டியெழுப்புதல்.

- இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் இயற்கை வாயுவுகான தனியார் துறைக்கான பங்குபற்றதல்கள் மற்றும் அவர்களுக்கான விநியோகம் மற்றும் சில்லறை வர்த்தகத்தை ஊக்குவித்தல்

*4.1.7.3* போட்டித்தன்மையையும் மற்றும் தனியார் துறையினரின் பங்குபற்றலையும் ஊக்குவிக்கின்ற பொருத்தமான கொள்கைகளையும் மற்றும் திறமுறைத்திட்டங்களையும் வகுத்தமைத்து செயற்படுத்துவதனூடாக, இலங்கையில் வித்தியாசமான பொருளாதாரத் துறைகளில், இயற்கை எரிவாயுவின் விநியோக சங்கிலியினதும் அதே போன்று இயற்கை எரிவாயு சந்தைகளினதும் திறந்த போட்டித்தன்மை வாய்ந்த சந்தைக் கட்டமைப்புகளின் அபிவிருத்தியை, அரசாங்கம் எப்பொழுதும் ஊக்குவிக்கும்.

*4.1.7.4* விடய அமைச்சு, தான் தேவை என உணர்கின்ற போது, நுகர்வோருக்கும், ஏனைய சந்தை இயக்குநர் தரப்புகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பிரதிகூலமான விதத்தில், சந்தை வலிமை ஒரு சில சக்தி வாய்ந்த தரப்புகளின் கைகளில் குவிவதை தடுக்கும் பொருட்டு, இயற்கை எரிவாயு விநியோக சங்கிலியின் உயர், நடுத்தர மற்றும் கீழ்நிலை பிரிவுகளில்சம்பந்தப்படுகின்ற ஒழுங்குறுத்தும் தரப்புகளின் உதவியுடனும் மற்றும் ஏற்கெனவேயுள்ள அரச உடமை கைத்தொழில் இயக்கு தரப்புகளினதும் அதே நேரம் உத்தேச அத்தகைய அரச உடமை கைத்தொழில் இயக்கு தரப்புகளினதும் காத்திரமான செயற்பாடு ரீதியான உதவியுடனும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

### 4.1.8 திறன் மற்றும் உள்ளூர் அபிவிருத்தி

4.1.8.1 இயற்கை எரிவாயுவின் உயர், நடுத்தர மற்றும் கீழ்நிலை செயற்பாடுகளிலுள்ள தேசிய ரீதியான ஆற்றலின் ஒரு முன்னேற்றகரமான அபிவிருத்தி, NPNG செயற்படுத்துகையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. முதலீட்டுத் தரப்புகள், அபிவிருத்தித் தரப்புகள், ஒப்பந்தத் தரப்புகள்/உப ஒப்பந்தத் தரப்புகள்மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் போன்ற கைத்தொழிலில் அக்கறையுடைய தரப்பகளுடனான மேம்பட்ட கூட்டொத்துழைப்பினூடாக, இது அடையப்படும். ஆகையால் தொழில், தொழில்நுட்ப அறிவு மற்றும் முகாமைத்துவத் திறமைகள், உற்பத்தித்திறன் வாய்ந்த மூலதன சொத்துக்கள் முதலிய வழிகளின் மூலமாக, இலங்கையர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கச்செய்யப்படும்.

4.1.8.2 கொள்கைக் கூற்று 4.1.7.2 இல் உத்தேசிக்கப்பட்டவாறு, பொருத்தமான ஊக்குவிப்புத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக, உள்ளூர் பகுதிகளில் எரிவாயுவை உணவுகள் தயாரிப்பதற்காகவும் மற்றும் சக்தி மூலவளமாகவும் பயன்படுத்துகின்ற கைத்தொழில்களை அமைப்பதை ஊக்குவிப்பதனூடாக, இயற்கை எரிவாயு சம்பந்தமான உள்ளூர் கைத்தொழில் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை, அரசாங்கம் மேற்கொள்ளும். அத்தகைய திட்டங்கள் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதிலும், உள்ளூர் மக்களின் உற்பத்தித் திறன்களை அதிகரிப்பதிலும், உள்ளூர் தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபார வாய்ப்புகளை உருவாக்குவதிலும், உள்ளூர் தொழில்முயற்சியாளர்களின் போட்டித்தன்மையை அதிகரிப்பதிலும், உள்நாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதிலும் மற்றும் உள்ளூர் நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதிலும் இலக்குக்கொள்கின்றன.

4.1.8.3 நாட்டின் இயற்கைவாயு தொழிற்துறைக்குத் தேவையான, நிபுணத்துவ துணைச் சேவைகள்/ கைத்தொழிற்துறை செயற்பாடுகளை கையாளுவதற்குத் தேவையான கப்பல் வசதிகள், கையாளுகைகள், சக்தி, இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்கு சாத்தியமான அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் உள்நாட்டு விடயங்களுக்குத் தேவையான துணைச் சேவை (cluster of ancillary service)/ கைத்தொழிற்துறைகளை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் அவசியமான வசதிகளை நிறுவுவதற்கும் அரசு தேவையான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

4.1.8.4 உள்ளூர் மக்களுடன் சில நன்மைகளை பகிர்ந்துகொள்வதற்கும் மற்றும் தொழில்முயற்சிகளின் சமூக நிலை அந்தஸ்தையும், ஏற்றுக்கொள்ளத்தகுதன்மையையும் அதிகரிப்பதற்கும் என உள்ளூர் ரீதியாக முந்துரிமை அளிக்கப்பட்ட சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளக்கூடிய வகையில், கைத்தொழிலில் அக்கறையுடைய தரப்புகள் ஊக்குவிக்கப்படும்.

4.1.8.5 இது தவிர, அரசாங்கத்தின் இலக்குக்கொள்ளப்பட்ட தலையீட்டு நடவடிக்கைகளினூடாக, பின்வரும் பிரிவுகளில் தேசிய ரீதியான ஆற்றல் அதிகரிக்கப்படும்.

- இயற்கை எரிவாயு கைத்தொழிலில் சம்பந்தப்படும் தேவையான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ திறன்களை இலங்கை மக்களுக்கு கற்பிக்கும் பொருட்டு உள்நாட்டு பல்கலைக்கழகங்களையும், தொழில்நுட்பக் கல்லூரிகளையும், வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிலையங்களையும் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் பொருத்தமான நிறுவனங்களையும் வலுப்படுத்துதல்.

- கல்வி, ஆராய்ச்சி மற்றும் எரிவாயு கைத்தொழிலில் தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் பரிமாறிக்கொள்ளல் என்பவற்றில் சர்வதேச கூட்டொத்துழைப்புக்கு உதவுதல்.

- பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கும் மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிலுநர்களுக்கும் உள்ளக வாய்ப்புகளை வழங்கும் வகையில் முதலீட்டுத் தரப்புகளையும் மற்றும் அபிவிருத்தித் தரப்புகளையும் ஈடுபடச்செய்தல்.

- தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் அறிவையும், திறன்களையும் மற்றும் புத்தாக்கங்களையும் ஊக்குவிக்கும் பொருட்டு தனியார் மற்றும் அரச துறை பங்காளித்துவத்தைக் கொண்டு, இயற்கை எரிவாயு கைத்தொழிலில் ஒரு சிறப்பு நிலையத்தை தாபித்தல்.இது இயற்கை எரிவாயு கைத்தொழிலின் தொழில்நுட்ப, நிதி, சட்ட மற்றும் சுகாதார, பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் ஆகிய அம்சங்கள் தொடர்பான போதிய அனுபவமுடைய இலங்கையர்கள் அடங்கலாக பெற்றோலிய கைத்தொழிலில் தற்பொழுது ஈடுபடுகின்ற வெளிநாட்டவர்களையும் ஈடுபடச்செய்யும்.

- தனியார் தரப்புகள் அடங்கலாக வித்தியாசமான பெறுமான சங்கிலிக் கட்டங்களில் சம்பந்தப்படும் கைத்தொழிலில் அக்கறையுடைய பல தரப்புகளிடமிருந்து தகவல்களை சேகரிக்கக்கூடிய முழுமையான ICT தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான ஒரு இயற்கை எரிவாயு தகவல் முறைமையை தாபித்து அதனை அபிவிருத்தி செய்தல். குறித்த தகவல் முறைமை வழமையாக இற்றைப்படுத்தப்பட்டு திட்டமிடல், கொள்கை அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் பயன்படுத்தப்படும்.

- பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் போன்ற இணைந்த சேவைகளில் உள்ளூர் ஆற்றல்களையும் திறன்களையும் அபிவிருத்தி செய்தல்.

- பொறுப்புணர்வை கணிப்பிடும் பொருட்டு இயற்கை எரிவாயு சம்பந்தமான கைத்தொழிலில் காணப்படும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் பற்றி பொதுமக்களுக்கு அறியப்படுத்துவதற்கான பயனுள்ள தொடர்பாடல் திறமுறைத்திட்டத்தை தயாரித்தல்.

- மேல்நிலை, நடுத்தர நிலை மற்றும் கீழ்நிலை பெற்றோலிய கைத்தொழிலின் நிலையான அபிவிருத்திற்கு பயன்படுத்தப்படும் வகையில் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற LNG எரிவாயுவுக்கு ஒரு பெயரளவான கட்டணத்தை அறவிடுதல் அல்லது ஒரு பெயரளவான வரித்தீர்வையை விதித்தல்.

- உள்ளூர் ஆற்றல்களையும் மற்றும் திறன்களையும் அபிவிருத்தி செய்வதில் தேசிய எண்ணெய் மற்றும் எரிவாயு கம்பனிகளை காத்திரமாக பங்குபற்றச்செய்வதை வலுப்படுத்துதல்.

### 4.2 பிரதான பொருளாதார துறைகளில் இயற்கை எரிவாயுப் பயன்பாட்டின் துறை சார்ந்த குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்கான கொள்கைகள்

இலங்கை, எதிர்வரக் கூடிய ஆண்டுகளில் தேசிய கொள்கையை அமுல்படுத்துவதனூடாக பொருளாதாரத்தின் பல துறைகளிலும் இயற்கை எரிவாயுவின் பாவனையில் முன்னேற்றகரமான வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும். கைத்தொழில், போக்குவரத்து, வீட்டு மற்றும் வர்த்தகத் துறைகள் மூலம் படிப்படியாக பின்பற்றப்பட வேண்டிய நகர்வை முதலில் மேற்கொள்வதற்கு சக்தித் துறை எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் துறைகளிலுள்ள இயற்கை எரிவாயு பாவனையானது சகல பிரிவுகளுக்கும் பிரத்தியேகமாக பிரயோகிக்கக்கூடிய குறுக்குவெட்டுக் கொள்கைகளின் மூலமாக அடையாளப்படுத்த முடியாத வித்தியாசமான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ விடயங்களில் சம்பந்தப்படுகின்றது. குறித்த துறை சார்ந்த பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்தமைப்பதன் அவசியத்தை NPNG அங்கீகரிக்கின்றது. ஆகையால், மின்னுற்பத்தி மற்றும் போக்குவரத்து, கைத்தொழில், வீட்டுத் துறை மற்றும் களஞ்சிய வசதிகள் என்பவற்றில் இயற்கை எரிவாயுவின் பாவனைக்கு ஏற்புடைய கொள்கை சார்ந்த கூற்றுக்கள் இந்தப் பிரிவில் உள்ளடங்கியிருக்கின்றன.

#### 4.2.1 சக்தி, போக்குவரத்து, கைத்தொழிற்துறை மற்றும் வீட்டுத்துறைகளில் இயற்கை எரிவாயுவின் பாயன்பாடுகள்

4.2.1.1 அரசாங்கம் பின்வரும் பிரிவுகளில் கவனத்தை செலுத்தி, மின்னுற்பத்தி, போக்குவரத்து, கைத்தொழில், வீட்டு மற்றும் வர்த்தகத் துறைகளில் இயற்கை எரிவாயுவின் பாவனையை அறிமுகப்படுத்தும் மற்றும் ஊக்குவிக்கும் சாத்தியத்தை முறையாக மதிப்பிடும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- இயற்கை வாயுவை ஒரு சக்தி மூலமாக மற்றும் / அல்லது கைத்தொழிற்துறைக்கான உள்ளீடாக அறிமுகப்படுத்தும் போது இத்தொழிற்துறைக்கு பொருத்தமான உட்கட்டுமான வசதிகள், தொழிநுட்பம் மற்றும் இதற்குத் தேவையான பயிற்சி நெறிகள் மிகவும் அவசியமானதாகும்.

- தற்போது சக்தி மூலத்திலிருந்து இயற்கை வாயுவுக்கு நகரும்போது அரச மற்றும் தனியார் துறையினரின் பாரிய பங்களிப்பு பொருத்தமான துறைக்கான ஈடுபாடுகள் மற்றும் முதலீடுகள் மிகவும் அவசியமானதாகும்.

- தற்போதய சக்திப் பாவனையில் இருந்து இயற்கை வாயுவுக்கு மாற்றமடைதல் மற்றும் அதனால் ஏற்படும் அனுகூலங்கள்.

- இயற்கை வாயுவை ஒரு சக்தி மூலமாக மற்றும்/அல்லது ஒரு கைத்தொழில் உள்ளீடாக அறிமுகப்படுத்துவதற்கான குறித்த துறை சார்ந்த உகட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளின் தேவைகள்.

- தற்போதைய சக்தி மூலத்திலிருந்து இயற்கை வாயுவுக்கு மற்றும்/அல்லது LNG வாயுவுக்கு நகர்வதற்கான வித்தியாசமான துறைகளின் தொழில்நுட்ப மற்றும் ஆற்றல் அபிவிருத்தி தேவைகள்.

- தற்போதைய சக்தி மூலத்திலிருந்து இயற்கை எரிவாயுவுக்கு/ LNG வாயுவுக்கு நகர்வதற்கு தேவையான முதலீடுகளை செய்வதற்கு அந்தந்தத் துறைகளிலுள்ள அரச மற்றும் தனியார் துறைத் தரப்புகளின் விருப்பமும் ஆற்றலும்.

- வித்தியாசமான துறைகளில் இயற்கை எரிவாயுவுக்கான நகர்வுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான சுற்றாடல் மற்றும் சமூக ரீதியான தாக்கங்கள்.

- அந்தந்தத் துறைகளில் வித்தியாசமான எரிவாயு பாவனைகளுக்கு (உ+ம்: உந்து சக்தி, அனல் சக்தி, கைத்தொழில் உள்ளீடுகள்) ஏற்புடைய சுகாதார மற்றும் பாதுகாப்பு நியமங்கள்.

- தற்போதிருக்கின்ற சக்தி மூலத்திலிருந்து இயற்கை எரிவாயுவுக்கு மற்றும்/அல்லது LNG எரிவாயுவுக்கு நகர்வதன் காரணமாக வரும் நகர்வு ஆகுசெலவுகளினதும் மற்றும் சாத்தியமான நன்மைகளினதும் ஒப்பீட்டு மதிப்பீடு.

4.2.1.2 அத்தகைய மதிப்பீடுகளின் பெறுபேறுகளை பொறுத்து, 4.1.7.2 கொள்கைக் கூற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு பொருத்தமான ஊக்குவிப்பு திட்டங்களை வகுத்தமைத்து, இயற்கை எரிவாயுவின் பாவனை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவிவுகளிலும் மற்றும் செயற்பாடுகளிலும் ஊக்குவிக்கப்படும்.

4.2.1.3 எரிவாயு பாவனை தொடர்பான தலைமைத் திட்டம் (GUMP) 4.1.5.9 கொள்கைக் கூற்றில் உத்தேசிக்கப்பட்டவாறு, தேசிய சக்திக் கொள்கை மூலமான நிரல்படுத்தலிலுள்ள எதிர்கால கருத்திட்டங்களின் அடிப்படையில் இயற்கை எரிவாயுவின் பயன்பாடு அல்லது அதன் ஊக்குவிப்பு தொடர்பான நீண்டகால கருத்திட்டங்களிலும் மற்றும்மின்னுற்பத்தி, போக்குவரத்து, கைத்தொழில், வீட்டுமற்றும் வர்த்தகத் துறைகளிலும் இயற்கை எரிவாயுவின் பாவனையை ஊக்குவிப்பதற்கு குறித்த துறை சார்ந்த செயற்பாடுகளையும் மற்றும் திறமுறை ரீதியான தலையீட்டு நடவடிக்கைகளையும் உணரக்கூடிய ஒரு அண்ணளவான காலத்தை (ஐந்து வருடங்கள்) உள்ளடக்கியிருக்கும். இந்தத் திட்டம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

4.2.1.4 குறித்த துறை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகள் அதிகளவு தேவைப்படும் பிரிவாக இருக்கலாம் எனும் வித்தியாசமான பாவனைகளின்/ துறைகளின் நிமித்தம், இயற்கை எரிவாயுவினதும் மற்றும் LNG வாயுவினதும் பகிர்ந்தளிப்பில் விஷேட கவனம் செலுத்தப்படும். வித்தியாசமான பாவனையாளர்களுக்கு இயற்கை எரிவாயுவை பகிர்ந்தளிப்பதில் எதிர்கால அரச மற்றும் தனியார் துறைகளின் முதலீட்டுத் தரப்புகளுக்கு தொழில்நுட்ப உதவியையும் மற்றும் நிறுவன சார் ஆதரவையும் வழங்கி, நாட்டினுள் இயற்கை எரிவாயுவின் பகிர்ந்தளிப்பு தொடர்பான விடயங்களை, உத்தேச தேசிய எரிவாயு கம்பனியும், இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனமும் (இ.பெ.கூ.) அமைச்சின் பணிப்புரையிலும் மற்றும் வழிகாட்டலிலும்மேற்கொண்டு கவனிக்கும்.

4.2.1.5. பிரிவு 4.2.1.4 இல் உத்தேசிக்கப்பட்ட ஆதரவு ஏற்பாடுகள் இயற்கை எரிவாயு பகிர்ந்தளிப்பின் பின்வரும் விடயங்களில் ஒருமுகப்பட்டு காணப்படும்.

- ஆகக்குறைந்த ஆபத்துக்களில் அதாவது பொதுமக்களுக்கு மிகவும் குறைந்தளவான அசௌகரிகத்தில் மற்றும் சுற்றாடலுக்கு மிகவும் குறைந்தளவான பாதிப்பில் இயற்கை எரிவாயுவுக்கான தேவைகளை முன்வைக்கின்ற துறைகளுக்கு/பாவனையாளர்களுக்கு உரிய கால இடையறாத விநியோகத்தை உறுதிசெய்தல்.

- குழாய்மார்க்கங்களை அமைத்தல், களஞ்சியம் மற்றும் ஏனைய வசதிகள் என்பன அடங்கலாக எரிவாயு பகிர்ந்தளிப்பு வசதிகளின் நிர்மாணத்திற்கு தொழில்நுட்ப உதவியை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல்.

- பகிர்ந்தளிப்பு சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு உரிய அதிகார சபைகளிலிருந்து தேவையான அங்கீகாரங்களையும் மற்றும் அனுமதிகளையும் பெற்றுக் கொள்வதில் உதவுதல்.
- வீதி, புகையிரத வீதி மற்றும் எரிவாயு ஏற்றியிறக்கல் மார்க்கங்கள் மற்றும் களஞ்சிய டாங்கிகளிலுள்ள எரிவாயு களஞ்சிய பராமரிப்பு என்பவற்றினூடாக இயற்கை எரிவாயு பகிர்ந்தளிப்புக்கான பிராந்திய நிலையங்களை (பி.நி.) தாபித்து, அவற்றுக்கு அதிகாரம் அளித்து, அவற்றை மேற்பார்வை செய்தல்.
- பிராந்திய நிலையங்களிலிருந்து (பி.நி.) கைத்தொழில் வலயங்கள், வீட்டு கட்டிடத்தொகுதி கள், கூட்டுஆதன மாடி வீட்டு கட்டிடத்தொகுதிகள் மற்றும் எரிவாயு ட்ரக் வண்டிகளில் எரிபொருளை விநியோகிக்கும் நிலையங்கள் மற்றும் தனியாள் நுகர்வோருக்கான உள்ளூர் குழாய்மார்க்க வலையமைப்புகள் என்பவற்றுக்கு இயற்கை எரிவாயுவை பகிர்ந்தளிப்பதை ஒழுங்குறுத்துதல்.
- குழாய் மார்க்கங்களின் மூலமாக நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் எரிவாயு தொடர்பான ஆபத்துக்கள் மற்றும் அத்தகைய ஆபத்துக்களை குறைப்பதற்கான முற்காப்பு நடவடிக்கைகள் என்பன பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை, உள்ளூர் வலையமைப்புகளினூடாக நடத்துதல்.
- குழாய் மார்க்கங்களின் அல்லது ட்ரக் வண்டிகளின் மூலமாக எரிவாயு பகிர்ந்தளிப்பு விடயத்தை கையாளுகின்ற நபர்களுக்கு பாதுகாப்பு நியமங்கள் தொடர்பான கட்டாய பயிற்சியையும் மற்றும் வழிகாட்டல்களையும் வகுத்தமைப்பதையும் மற்றும் இயக்கு தரப்புகளினால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளை உறுதிசெய்தல்.
- **CNG** மற்றும் LNG ஆகிய எரிவாயு சக்தியில் இயங்குகின்ற வாகனங்களுக்கு எரிவாயுவை விநியோகிப்பதற்காக கடுகதி வீதிகள் ஓரமாகவும் மற்றும் பிரதான வீதிகள் ஓரமாகவும் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் CNG மற்றும் LNG வசதிகளை தாபித்து, அனுமதி வழங்கி, மேற்பார்வை செய்தல்.

***4.2.2 கப்பல் எண்ணெய் மற்றும் ஏற்றுமதிகள்***

*4.2.2.1* LNG வாயு சக்தியில் இயங்கும் கடலில் பயணிக்கும் கப்பல்களின் இயக்கத்தில் பிரதானமாக சுற்றாடல் பிரச்சினைகளுக்காகவும் மற்றும் IMO 2020 குறைந்த சல்பர் விதி தேவைப்பாட்டிற்காகவும் கப்பல் கைத்தொழிலில் வளர்ந்து வரும் ஒரு போக்குகாணபப்படுகின்றது. LNG வாயு சக்தியில் இயங்கும் கப்பல்களுக்கு LNG எரிவாயுவை விநியோகிப்பதற்கான மற்றும் LNG களஞ்சியப்படுத்தலுக்கான இந்த போக்கின் பயனாக தாராளமாக வருகின்ற சந்தை வாய்ப்பை அடைந்துகொள்ளும் பொருட்டு, அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

*4.2.2.2* அரச மற்றும் தனியார் துறையினரின் பங்காளித்துவ ஏற்பாடுகளின் கீழ் உள்ளூர் ரீதியாக உற்பத்தி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் LNG எரிவாயுவை பயன்படுத்தும் நிமித்தம் அத்தகைய எரிவாயு வசதிகளைத் தாபிப்பதை அரசாங்கம் ஊக்குவித்து, வசதியளிக்கும்.

*4.2.2.3* திரவ இயற்கை வாயுவை ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி பொருட்கள் என்ற வகையில் விற்பனை செய்யும் நிலையங்கள் ஏற்படின் அல்லது சேவையில் ஈடுபடும் கப்பல்களுக்கு இதனை வழங்கவேண்டிய நிலைமைகள் ஏற்படின் இதன் விலைகள் பிராந்தியத்தில் உள்ள விலைகள் மற்றும் இதற்கான பொருத்தமான வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மற்றும் இலலங்கையில் காணப்படும் தொழிற்துறைகளின் போட்டித் தன்மை அதிகரிப்புக்கள் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**5. ஏற்றுக்கொள்ளும் தன்மையும் மற்றும் நோக்கெல்லையும்**

LNG இன் உள்நாட்டு உற்பத்தி (சுதேசிய வளங்களிலிருந்து) மற்றும் அதன் இறக்குமதிகள் ஆகிய இரண்டு அம்சங்களிலிருந்தும் வருகின்ற விநியோகங்களை கருத்திற்கொண்டு, இயற்கை எரிவாயுவின் உயர், நடுத்தர மற்றும் கீழ்நிலை பிரிவுகளில் சம்பந்தப்படும் பல ஒட்டுமொத்த செயற்பாடுகளும், அடிப்படை கோட்பாட்டு ரீதியில், NPNG இன் நோக்கெல்லையில் உள்ளடங்குகின்றன. எனினும், சுதேசிய வளங்களின் கண்டுபிடிப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுடன் சம்பந்தப்படுகின்ற

உயர்நிலை செயற்பாடுகளுக்கு, ஏனைய கொள்கை ஆவணங்களின் மூலமாகவும் அதிகளவில் விரிவாக வழிகாட்டப்படும். ஆகையால், இந்த தேசிய கொள்கை எரிவாயு விநியோகம், பதனிடுகை, எரிவாயுவாக்கல், எடுத்துச்செல்லல், களஞ்சியப்படுத்தல், மீளவாயுவாக்கல், பகிர்ந்தளித்தல் மற்றும் ஏனைய துணைச் சேவைகள் என்பவற்றில் சம்பந்தப்படுகின்ற இயற்கை எரிவாயு பெறுமான சங்கிலியில் நடுத்தரமற்றும் கீழ்நிலை இணைப்பு வசதிகளில் கவனம் செலுத்துகின்றது.

### 6. கொள்கை அமுலாக்கல்

NPNG இன் கொள்கை ரீதியான குறிக்கோள்களை வெற்றிகரமாக அடையும் விடயம், கொள்கை சார்ந்த உத்தேச தலையீட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதிலுள்ள வினைத்திறன் அளவினாலும் மற்றும் பயன்தகுதன்மையின் அளவினாலும் நிர்ணயிக்கப்படும். ஆகையால், இது NPNG வேலைச்சட்டகத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் ஆகிய முக்கியமான பிரிவுகள், மற்றும் ஒட்டுமொத்தப் பொறுப்பு மற்றும் அதிகாரம் என்பவற்றை உள்ளடக்கிய விரிவான செயற்படுத்துகை சார்ந்த திறமுறைத்திட்டத்தை இனங்காணுகின்றது. NPNG இல் காணப்படும் ஒவ்வொரு கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கையினதும் அமுலாக்கத்திற்கு தேவையான குறித்த செயற்பாடுகள் உள்ளடங்கிய மிக விரிவான திறமுறைத்திட்டங்கள், உரிய அமுலாக்கல் காலப்பகுதியில், பொருத்தமான அக்கறையுடைய தரப்புகளினால் இனங்காணப்படும். 4.1.5.9 கொள்கைக் கூற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ள எரிவாயு பாவனை தொடர்பான தலைமைத் திட்டம் (GUMP) NPNGஇன் வெற்றிகரமான அமுலாக்கலுக்கு பல அக்கறையுடைய தரப்புகள் மூலமான முயற்சிகளை ஒன்றிணைப்பதற்கான வழிமுறைகளை குறிப்பீடுசெய்யும்.

#### 6.1. உபாயமார்க்கங்களை அமுல்படுத்துதல்

ஏற்கெனவேயிருக்கின்ற மட்டுப்பட்டளவான ஆற்றலில் இருந்து ஆரம்பத்தில் ஒரு இயற்கை எரிவாயுவை அறிமுகப்படுத்துவதில் சம்பந்தப்படும் எரிவாயு பெறுமான சங்கிலிகளின் சிக்கல்வாய்ந்த தன்மையையும் மற்றும் சவால்களையும் கருத்திற்கொண்டு, அரசாங்கம் படிப்படியான ஒரு அமுலாக்கல் திறமுறைத்திட்டத்தை பின்பற்ற எண்ணுகின்றது. இந்த அமுலாக்கல் திறமுறைத்திட்டத்தில் பின்வரும் முக்கியமான கட்டங்கள் உள்ளடங்கியிருக்கும்.

- **பூர்வாங்க ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டுறவு கட்டியெழுப்பல் நடவடிக்கைகள்:**
  முகவராண்மைகளுக்கு இடையிலான தொடர்பாடல் அம்சங்களை முன்னெடுத்தல், முகவராண்மை மட்டத்திலான முக்கிய அம்சங்களைக் கண்காணித்தல், பல முகவராண்மை ஒருங்கிணைப்பு குழுக்களை நியமித்தல், ஏற்கெனவேயிருக்கின்ற முகவராண்மைகளின் குறித்த வகிபங்குகளையும் மற்றும் பொறுப்புக்களையும் இனங்காணுதல், மற்றும் செயற்பாடுகளின் பூர்வாங்க மீளாய்வு, இருப்புக்களை கணக்கெடுத்தல் மற்றும் பூர்வாங்கத் திட்டமிடல் போன்ற அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அத்தியாவசிய ஒருங்கிணைப்பு செயற்பாடுகளில், இது சம்பந்தப்படும்.

- **ஏற்கனவேயிருக்கின்ற சட்ட மற்றும் நிறுவன சார் வேலைச்சட்டகத்தினுள் சாத்தியமான தலைமீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்:**
  பூர்வாங்க கட்டத்தில் தயாரிக்கப்படும் ஒருங்கிணைப்பு பொறிமுறைத்திட்டத்தைப் பயன்படுத்தி, அக்கறையுடைய தரப்புகள் கூட்டாக இணைந்து, ஏற்கெனவேயிருக்கின்ற சட்ட மற்றும் நிறுவன சார் வேலைச்சட்டகத்தினுள் முன்னெடுக்கப்படக்கூடிய தலையீட்டு நடவடிக்கைகளை இனங்கண்டு, அவற்றை அமுலாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- **சட்ட, நிறுவன மற்றும் ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகங்களிலுள்ள கட்டமைப்பு மாற்றங்களை இனங்காணுதல்:** இது அக்கறையுடைய ஏற்கெனவேயிருக்கின்ற வேலைச்சட்டகத்தில் சாத்தியமான தலையீட்டு நடவடிக்கைகளை செயற்படுத்தும் அதே வேளையில், ஏனைய கொள்கை தொடர்பான அமுலாக்கலுக்கு தேவையான சட்ட, நிறுவன மற்றும் ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகங்களில் தேவையான கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களை இனங்காணும்.

- **GUMP திட்டத்தைத் தயாரித்து முன்னெடுத்தல்:**
  இது, அக்கறையுடைய தரப்புகளுடனான ஆலோசனை சந்திப்புகளை நடத்துதல், ஒரு ஐந்து ஆண்டு திட்டத்தினுள் குறிக்கோள்களையும் மற்றும் இலக்குகளையும் இனங்காணுதல், கால வரையறைகள் அடங்கிய குறித்த திறமுறைத்திட்டங்களையும் செயற்பாடுகளையும் தொகுத்து GUMP திட்டத்தை தயாரித்தல், குறித்த

செயற்பாடுகளுக்கு பொறுப்புடைய முகவராண்மைகளை இனங்காணுதல், வேலைச்சட்டகத்தை தயாரித்தல், திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை குறிப்பீடுசெய்யப்பட்ட கால வரையறையினுள் ஆரம்பித்தல் முதலிய அம்சங்களில் சம்பந்தப்படும்.

**அமுலாக்கல் மூலோபாய திட்டத்தின் தற்காலிக கால அட்டவணை பின்வருமாறு:**

| அமுலாக்கல் படிமுறைகள் | தற்காலிக கால வரையறை |
|---|---|
| ஆரம்ப ஒருங்கிணைப்பு மற்றும் கட்டியெழுப்பல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் | அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்து 3 மாதங்களுக்குள் |
| ஏற்கெனவேயிருக்கின்ற சட்டம் மற்றும் நிறுவன சார் வேலைச்சட்டகத்தினுள் சாத்தியமான தலையீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் | இக்கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 8 மாதங்களுக்குள் |
| சட்டம், நிறுவன மற்றும் ஒழுங்குபடுத்தல் மாதிரிக் கட்டமைப்பு மாற்றங்களை ஒருங்கிணைத்தல் | இக்கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து ஒரு வருடத்திற்குள் |
| GUMP திட்டத்தைத் தயாரித்து முன்னெடுத்தல் | இக்கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 18 மாதங்களுக்குள் |

### 6.2 பொறுப்பு மற்றும் அதிகாரம்

இந்த NPNG திட்டத்தை அமுலாக்கும் பிரதான பொறுப்பு “பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி விடயம்” சாட்டப்பட்டுள்ள அமைச்சை (தற்போதைய பெருந்தெருக்கள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி) சாரும். இயற்கை எரிவாயுவை நுகர்வோருக்கு சாத்தியமான சுமக்கக்கூடிய விலையில் கிடைக்கச்செய்யும் நிமித்தம், இயற்கை எரிவாயுக்களை கண்டுபிடித்தல், இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியன தொடர்பில் பொருத்தமான அக்கறையுடைய தரப்புகளினதும் மற்றும் நிறுவனங்களினதும் கூட்டொத்துழைப்புடன் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு விடய அமைச்சுக்கு சாட்டப்பட்டுள்ளது. இந்த விடய அமைச்சு, குறித்த கொள்கையின் குறிக்கோள்களையும் மற்றும் இலக்குகளையும் அடையும் பொருட்டு, தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை நிறைவேற்றி, NPNG இன் அமுலாக்கலில் தலைமை வகிக்கும்.

சம்பந்தப்பட்ட கொள்கை ரீதியான தலையீட்டு நடவடிக்கைகளின் பிரிவை பொறுத்து, இது தொடர்பில், விடய அமைச்சுக்கு எமது செயல்நோக்கில் வருகின்ற நிரல் முகவராண்மைகளும், ஏனைய அமைச்சுக்களும் மற்றும் ஏனைய நிரல் முகவராண்மைகளும் உதவும். இயற்கை எரிவாயுவின் சுதேசிய வளங்களினது வர்த்தக ரீதியான அபிவிருத்தியுடன் சம்பந்தப்படுகின்ற கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் இந்த விடய அமைச்சுக்கு, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் (பெ.வ.அ.செ.) நேரடியாக உதவும். சுதேசிய வளங்கள் தொட்டு உரித்து மாற்றல் வரை, இயற்கை வாயு கண்டுபிடித்தல் மற்றும் இயற்கை வாயுவின் பாவனை ஆகியவற்றுக்கு உதவும் பொறுப்பு இந்த பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்கு சாட்டப்பட்டுள்ளது. பெற்றோலியத்தை இறக்குமதி செய்து நாட்டில் பகிர்ந்தளிப்பதற்குரிய ஒரு கட்டாய பொறுப்பைக்கொண்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ.) மற்றும் இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையம் (இ.பெ.க.மு)போன்ற முகவராண்மைகளிடமிருந்தும் விடய அமைச்சு தேவையான நிபுணத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொள்ளும்.

விடய அமைச்சு 4.1.5 கொள்கைக் கூற்றில் உத்தேசிக்கப்பட்டவாறு, கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளை செயற்படுத்தும் பொருட்டு புதிய நிறுவன சார் ஒழுங்குகளை தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும். நாட்டில் இயற்கை எரிவாயுவுடன் தொடர்புடைய விடயங்களை கையாளுவதற்கும் மற்றும் ஒருங்கிணைப்பதற்கும் என, விடய அமைச்சு 4.1.5.6 கொள்கைக் கூற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு, தேவையான அதிகாரத்தத்துவங்களையும் மற்றும் வளங்களையும் வழங்கி, தேசிய எரிவாயு கம்பனியைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும். 4.1.5.2 மற்றும் 4.1.5.3 ஆகிய கொள்கைக் கூற்றுக்களில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு, இந்த நிறுவன ஒழுங்குகளின் சுமுகமான தொழிற்பாட்டிற்கு, பொருத்தமான சட்டஏற்பாடுகளையும் மற்றும் பொறிமுறைத்திட்டங்களையும்

அறிமுகப்படுத்துவது அவசியமாகும். வித்தியாசமான கொள்கைக் கூற்றுக்களினால் விதிக்கப்பட்டுள்ளவாறு, அமுலாக்கலுக்கு பொறுப்புடைய நிறுவனங்களும் அவற்றின் பொறுப்புக்களும் பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| முகவர் | பாரிய பங்கு/பொறுப்பு |
|---|---|
| பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சு | கொள்கை ரீதியான பணிப்புரையை வழங்குதல், வழிகாட்டுதல், முகவர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் மற்றும் NPNG இன் அனைத்து அமுலாக்கத்தையும் மேற்பார்வை செய்தல் |
| பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் (PRDS) | மேல்- நிலை இயற்கை வாயு தொழிற்துறை ஒழுங்குபடுத்துனர் |
| இயற்கை வாயு நிறுவனம் (NPNG ஆல் முன்மொழியப்பட்ட) | அரச, தனியார், பங்குடமை (PPP) நிறுவனங்கள், தொழி நுட்ப மற்றும் NPNG யின் அமுல்படுத்தல்களுக்கான நிறுவன உதவிகள் உள்ளடங்கலான இயற்கை வாயு வுக்கான அனைத்து பொருளாதாரக் கொடுப்பனவுகளைக் கையாளக் கூடிய நம்பத்தகுந்த தனி நிறு வனம் (SCE) |
| இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு | நடுத்தர மற்றும் கீழ்நிலை எரிவாயு சந்தையை ஒழுங்குபடுத்துதல் |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | NPNG அமுல்படுத்துவதற்கான தொழிநுட்ப மற்றும் நிறுவனம் சார்ந்த உதவிகள் |

கொள்கை சார்ந்த பெரும்பான்மை தலையீட்டு நடவடிக்கைகளில்போது, விடய அமைச்சு தனது செயல்நோக்கில் வருகின்ற நிரல் முகவராண்மைகளுடன் மட்டுமன்றி, NPNG இன் குறிக்கோள்களையும் மற்றும் இலக்குகளையும் அடைந்துகொள்ளும் பொருட்டு, விடய அமைச்சு பல ஒழுங்குறுத்துகை நிறுவனங்களுடனும் இணைந்து தொழிற்படுவது அவசியமாகும். இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இ.பொ.ப.ஆ.), மத்திய சுற்றாடல் அதிகார சபை (ம.சு.அ.ச.), கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை (க.சு.பா..அ.ச.), டிரெக்டரேட் ஒவ் மேர்ச்சன்ட் சிப்பிங் நிறுவனம் (DMS), கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் (க.பா.க.வ.மு.தி.), மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் (மோ.போ.தி.) போன்ற தேசிய அரச நிறுவனங்கள் இவற்றில் உள்ளடங்கும். தேவையான போது, அத்தகைய முகவராண்மைகளின் கூட்டிணைப்பை பட்டியல்படுத்தும் நிமித்தம் ‘பல முகவராண்மைக் குழுக்களை’ நியமித்தல் போன்ற பொருத்தமான ஒருங்கிணைப்பு பொறிமுறைத்திட்டங்களையும், விடய அமைச்சு முன்னெடுக்கும்.

உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகள் போன்ற உப தேசிய முகவராண்மைகளினதும் உதவியை தேவைப்படுத்தும் தலையீட்டு நடவடிக்கைகள் குறித்த NPNG இல் உள்ளடங்கியிருக்கும். NPNG இன் அமுலாக்கத்திற்கு அத்தகைய உப தேசிய முகவராண்மைகளின் உதவி தேவைப்படுகின்ற போது, அவற்றுடன் ஒருங்கிணைந்து தொழிற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை, விடய அமைச்சு மேற்கொள்ளும்.

NPNG இன் வெற்றிகரமான அமுலாக்கலுக்கு தேசிய மற்றும் உப தேசிய பொது முகவராண்மைகளின் உதவி மட்டுமன்றி, தனியார் துறை அமைப்புகளினதும் மற்றும் அரச துறை சாராத அமைப்புகளினதும் நெருங்கிய கூட்டுறவும் மற்றும் ஒருங்கிணைப்பும் அவசியமாகும். கொள்கைக் கோட்பாடு 3.5 மற்றும் கொள்கைக் கூற்று 4.1.5.6 ஆகியவற்றில் முன்மொழியப்பட்டுள்ளவாறு, அரச சாரா அமைப்புகளின் பயனுள்ள ஈடுபாட்டிற்கான அத்திவாரம் காத்திரமான ஒரு ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகத்தின் தாபிப்பை தேவைப்படுத்தும். NPNG இன் அமுலாக்கத்திற்கான ஒரு அவசரநிலை முன்னுரிமையாக, இயற்கை எரிவாயு கைத்தொழிலை நிருவகிப்பதற்கான ஒரு ஒழுங்குறுத்துகை பொறிமுறைத்திட்டத்தைத் தாபிப்பதற்கு, விடய அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

### 6.3 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகள்

கொள்கை சார்ந்த உத்தேச தலையீட்டு நடவடிக்கைகளின் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு, பின்வரும் முக்கியமான பிரிவுகளை உள்ளடக்கி, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு (க.ம.) வேலைச்சட்டகம் விடய அமைச்சினால் அறிமுகப்படுத்தப்படும்.

- ஒவ்வொரு அக்கறையுடைய தரப்பு முகவராண்மையினதும் குறித்த வகிபங்குகளும் மற்றும் பொறுப்புக்களும் உள்ளடங்கிய NPNG மற்றும் GUMP ஆகியவற்றின் அமுலாக்கத்திற்கான நிறுவன கட்டமைப்பு.

- ஒவ்வொரு அக்கறையுடைய தரப்புக்குமுரிய (Stake holders) முக்கியமான செயலாற்றுகைக் சுட்டிகளை தாபித்தல்.
- வழமையான மதிப்பீட்டிற்கான காலவரையறை
- நன்கு திட்டமிடப்பட்ட கால வரையறைகளைக் கொண்டு ஒவ்வொரு முகவராண்மைக்கும் என இனங்காணப்பட்ட செயற்பாடுகள்.
- அடிப்படைத் தரவுகளை சேகரித்தல், முக்கியமான அக்கறையுடைய தரப்புகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல் என்பவற்றுக்கான சமவாயங்கள் மற்றும் நடைமுறைகள்.
- பின்வருவனவற்றுக்கான சுட்டிகள் கட்டமைப்பு:
  - தகவுதிறன்களை (**benchmark**) நிர்ணயித்தல்
  - இலக்குகளையும் மற்றும் குறிக்கோள்களையும் அளவிடுதல்
  - ஒவ்வொரு அக்கறையுடைய தரப்புக்குமுரிய (stake holder) முக்கிய செயலாற்றுகை சுட்டிகளை தாபித்தல்
- வழமையான மதிப்பீட்டிற்கான காலவரையறை
- கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள்

தேவையான சரியான செயற்பாடுகளுக்கான உரிய கால உள்ளீடுகளுடன் கூடிய கொள்கை சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளின் தாக்கம் மற்றும் பயன்தகுதன்மை, வினைத்திறன் மற்றும் நிலைபெறுதகுதன்மை என்பவற்றை, M - E வேலைச்சட்டகம் மதிப்பிடும். 4.1.8.4.5 ஆம் பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள ICT அடிப்படையிலான இயற்கை எரிவாயு தகவல் முறைமை, M & E வேலைச்சட்டகத்தின் அமுலாக்கலுக்கு வசதியளித்து அத்தகைய அமுலாக்கத்தை மேம்படுத்தும்.

**அருஞ் சொல் விளக்கக்கோவை**

| | |
|---|---|
| பொஸில் எரிபொருள் (கனிய எண்ணெய்கள்) | புவி மேற்பரப்பில் காணப்படும் இயற்கையாக கிடைக்கும் கனிய எண்ணெய்கள். உ+ம்: பெற்றோலியம், நிலக்கரி அல்லது இயற்கை எரிவாயு. |
| ஹைட்ரோகாபன் | ஐதரச காபன்கள் ஐதரசனும் காபனும் கலந்த இயற்கையான பதார்த்தங்கள். ஹைட்ரோகாபன், வாயுக்களில், திரவத்தில் அல்லது திண்மப் பொருட்களில் காணப்படும். |
| பெற்றோலியம் | மசகு எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் அவற்றின் உற்பத்திகள் என்பன அடங்கிய ஹைட்ரோகாபன்களுக்கான ஒரு விஞ்ஞான மரபுப் பெயர். |
| பெற்றோலிய எண்ணெய்கள் | இயற்கையாக கிடைக்கும் மசகு எண்ணெய்யை சுத்திகரிப்பதன் மூலம் வரும் வித்தியாசமான அணுத் திணிவுகளையுடைய திரவநிலை ஹைட்ரோகாபன்கள் ஆகும். உ+ம்: பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் உலை எண்ணெய். |
| இயற்கை எரிவாயு | நீர்த்தேக்க நிலைமகளிலுள்ள இயற்கை நிலக்கீழ் நீர்த்தேக்கங்களில் காணப்படும் பெற்றோலிய மசகு எண்ணெய்யுடன் கலந்த நிலையில் காணப்படும் ஹைட்ரோகாபன்கள் கரைசல்களிலிருந்து இயற்கையாக வரும் கலவைகள். மெதேன், எதேன், ப்ரபேன், பியூடேன், மற்றும் பென்தேன் என்பன ஹைட்ரோகாபனில் உள்ளடங்கியுள்ளன. இயற்கை எரிவாயு சிறிய அளவில் ஹைட்ரோகாபன்களைக் கொண்டுள்ளது. மேலும் இது, காபனீர் ஒட்சைட்டு, ஹீலியம், ஐதரசன்சல்பேற்று மற்றும் நைதரசன் போன்ற பல வகையான ஹைட்ரோகாபன்கள் சாராத சிறு துணிக்கைகளையும் கொண்டுள்ளது. |
| உயிரியல்வாயு | உயிரியல்வாயுவானது புதுப்பிக்கத்தக்க இயற்கைவாயு அல்லது நிலையான இயற்கைவாயுவானது (CNG) உயிரியல்வாயுவின் மேன்மைபடுத்தப்பட்ட தரத்தினை உடையதோடு பொசில் இயற்கைவாயுக்குச் சமனானதும் 90% தத்திற்கு அதிகமான மெதேனைக்கொண்டதாகும். |
| திரவ இயற்கை வாயு (LNG) | அதிகளவு குறைந்த வெப்பநிலையுடைய (ஈ-160°ஊ) இயற்கை எரிவாயு. இது திரவமாக மாறும். இதனால் ஆபத்துக்கள் குறைவாக உள்ளதுடன் களஞ்சியப்படுத்துவதற்கும் மற்றும் எடுத்துச்செல்வதற்கும் மிக இலகுவாக இருக்கும். இது எரிவாயுவாக்கல் பொறித்தொகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற எரிவாயுவாக்கல் எனும் நடைமுறையினூடாக எரிவாயுவாக்கப்படுகின்றது. |

| | |
|---|---|
| உருளையில் அடைக்கப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) | எரிவாயு சக்தியில் இயங்கும் வீதியில் ஓடுகின்ற வாகனங்களில் பிரதானமாக பிரதியீட்டு எரிபொருளாக பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை, இது உருளையில் அடைக்கப்பட்டு இயற்கை எரிவாயு. பொறிமுறைத்திட்டம் பெறுமானத்தை குறைக்கும் என்பதால், CNG அழுத்தப் பிரயோகத்தில் தங்கியிருக்கும். |
| உருளையில் அடைக்கப்பட்ட உயிரியல் இயற்கை எரிவாயு (Bio CNG) | உருளையில் அடைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க இயற்கை எரிவாயு (RNG) எரிவாயு சக்தியில் இயங்கும் வீதியில் ஓடுகின்ற வாகனங்களில் பிரதானமாக பிரதியீட்டு எரிபொருளாக பயன்படுத்தப்படுகின்ற, உருளையில் அடைக்கப்படும் இயற்கை எரிவாயு. பொறிமுறைத்திட்டம் பெறுமானத்தை குறைக்கும் என்பதால், CNG அழுத்தப் பிரயோகத்தில் தங்கியிருக்கும். |
| திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு (LPG) | இலகு ஹைட்ரோகாபன் திரவ நிலையில் காணப்படுவதோடு இது சாதாரண அழுத்தங்களிலும் பிரயோகிக்கக் கூடியதாக உள்ளது. இதனால், இதன் அழுத்தங்களில் இலகுவாக களஞ்சியப்படுத்தல், எடுத்துச்செல்லல் மற்றும் கையாளுதல் என்பவற்றுக்கு உதவியாகவுள்ளது. பிரதானமாக ப்ரொபேன் அல்லது பியூடேன் அல்லது இவற்றின் கலவைகள் வர்த்தக வாய்ப்புடைய LPG எரிவாயுவாகக் காணப்படுகின்றது. |
| மூலப்பொருட்களை வழங்கும் வாயு ( Feed stock gas) | பெற்றோ இரசாயனம் மற்றும் ஏனைய கைத்தொழில் வெளியீடுகளுக்கான உற்பத்திகளில் ஈடுபடும் கைத்தொழில் செயற்பாடுகளுக்கான மூலப்பொருட்களாக உபயோகிக்கும் உலர் வாயுக்கள். |
| திரவமாக்கல் | இயற்கை எரிவாயுவை LNG வாயுவுக்கு மாற்றும் நடபடிமுறை. இது ஒரு குளிர்சாதனப் பெட்டியை உபயோகித்து பல வகையான வெப்பநிலைகளில் மறைந்திருக்கும் வெப்பத்தை நீக்குவதற்குத் தேவைப்படுத்தும். |
| அமிழ்த்துதல் அல்லது உருளைகளில் அடைத்தல் | CNG இன் பயனாக மிகச்சிறிய ஒரு இடைவெளியில் எரிவாயுவின் அளவை அடைக்கும் நடபடிமுறை. |
| மீளவாயுவாக்கல் | வெப்பத்தை பிரயோகிப்பதன் மூலமாக CNG ஐ அதன் வாயு நிலைக்கு மீண்டும் மாற்றும் ஒரு நடபடிமுறை. ஆகையால், எரிவாயு ஒரு குழாய்மார்க்க முறைமையினூடாக விநியோகிக்கப்படலாம். |
| மேல் நிலை எரிவாயு கைத்தொழில் | மேல் நிலை எரிவாயு கைத்தொழில் எரிவாயு கைத்தொழிலில் குழாய்மார்க்கம் அல்லது கப்பல் வரையான இடங்களில் காணப்படும் ஆய்வு மற்றும் உற்பத்தி செயற்பாடுகளை விவரிப்பதற்கு வழமையாக பயன்படுத்தப்படும் சொற்பதம். |
| கீழ் நிலை எரிவாயு கைத்தொழில் | கீழ்நிலை எரிவாயு கைத்தொழில் இயற்கை எரிவாயுவின் பகிர்ந்தளிப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றில் சம்பந்தப்படுகின்ற இறுதிப் பயனர் வரையான, வர்த்தக ரீதியில் மேற்கொள்ளப்படும் எரிவாயு செயற்பாடுகள். |
| நடுத்தர செயற்பாடுகள் | இயற்கை எரிவாயு மூலப்பொருளை எரிவாயு பதனிடப்படும் வசதிக்கு குழாய்மார்க்கத்தின் மூலமாக எடுத்துச்செல்லப்படுவதில் பிரதானமாக சம்பந்தப்படுகின்ற எரிவாயு எண்ணெய் விநியோக சங்கிலியின் உயர்நிலை மற்றும் கீழ்நிலை பிரிவுகளுக்கு இடையிலான செயற்பாடுகள். இந்த சொற்பதத்தை திட்டவட்டமாக வரையறை செய்ய முடியாது. சில நேரங்களில் ஏனைய இரண்டு வகுதிகளில் வருகின்ற கூறுகளுக்கும் இந்த சொற்பதம் பிரயோகிக்கப்படலாம். |
| களஞ்சியம் | களஞ்சியம் டாங்கிகளில் களஞ்சியப்படுத்துவதன் மூலமாக பருவகால தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இயற்கை எரிவாயு ஒதுக்க களஞ்சியத்தை பேணுதல். |
| குழாய்கள் | எரிவாயுவை பிரித்து தனிமைப்படுத்துதல், அளவிடுதல், சேகரித்தல். எடுத்துச்செல்லல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் தேவைப்படும் வால்வுகள் மற்றும்/அல்லது பிக் பீப்பாய்கள் போன்ற ஏனைய வசதிகள் அடங்கலாக, நிலத்தில் அல்லது கடலில் அத்தகைய இரண்டு இடங்களுக்கு இடையிலும் இயற்கை எரிவாயுவை எடுத்துச்செல்வதற்கான குழாய்மார்க்க முறைமை. |

| | |
|---|---|
| விலைச் சுட்டி | மற்றைய காரணிக்கு ஏற்ப வேறுபடுவதால் வரும் விலையை அனுமதிக்கின்ற உற்பத்தியின் (வழமையாக சிக்கல்தன்மை குறைந்த) விலையை அல்லது பொருளாதார சுட்டியை மற்றைய உற்பத்தியின் விலையுடன் இணைக்கப்படுகின்ற ஒரு ஒப்பந்த விலை சார்ந்த செயன்முறை. இந்த எரிவாயு ஒப்பந்த விலைகள் பெரும்பான்மை மசகெண்ணெய் சுட்டிகள், ஒரு சில எரிபொருள் எண்ணெய் விலைகள், அல்லது அடிக்கடி குறைந்தளவான சக்தி அல்லது பொருளாதார வளர்ச்சிச் சுட்டிகள் என்பவற்றுடன் இணைக்கப்படுகின்றன. |
| ஸ்பொட் விலைகள் | அதேவிடத்து விலை இயற்கை எரிவாயுவை கொள்வனவு செய்யும் போதும் மற்றும் விற்பனை செய்யும் போதும் குறுகிய காலத்தில் கொடுக்கப்படும் விலை. |
| வகைப்படுத்தப்பட்ட சமூகம் | கப்பல்களின் (எரிவாயுவை எடுத்துச்செல்லும் கப்பல்கள் அடங்கலாக) நிலைமை தொடர்பில் சோதனையிடுகைகளையும் மற்றும் ஆலோசனை வழங்குவதையும் ஒழுங்குசெய்கின்ற, கப்பல் கட்டப்படும் போதும் அதன் பின்னரும் அவற்றின் கடல் பெறுமானத்தை மதிப்பிடும் வகையில் மேற்பார்வை செய்கின்ற, மற்றும் அத்தகைய கப்பல்களை தரப்படுத்துகின்ற அல்லது வகைப்படுத்துகின்ற தனியார் நிறுவனங்கள். பெரும்பான்மை வகைப்படுத்தல் சங்கங்கள் இன்டர்நெஷனல் மெரிடைம் ஓர்கனைசேஷன் (IMO) LNG எரிவாயுதொடர்பான விதிமுறைகள் பற்றிய விதிக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. |